



Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 175

புதன்கிழமை
20 மே 2026

வைகாசி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50


# பிரிவினைக்கு எதிராகவே போராடியதாம் இராணுவம்

## ஜனாதிபதி அநுர புகழாரம்

**கொழும்பு, மே 20**

**மக்களுக்கு எதிராகவோ அல்லது குறிப்பிட்ட ஓர் இனத்துக்கு எதிராகவோ இராணுவம் போராடவில்லை. வடக்கிலும், தெற்கிலும் அரசியல் இலாபம் தேடமுற்பட்டவர்களால்தான் இந்தப் பேரழிவை நாடு எதிர்கொள்ள நேர்ந்தது - இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.**

»15

# இராணுவத்தைப் பாதுகாப்பதற்கு பெரமுன எப்போதும் முன்னிற்கும்

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, மே 20
ஒற்றையாட்சிக் கட்டமைப்பையும், இராணுவத்தையும் பாதுகாப்பதற்கு இலங்கை எப்போதும் முன்னிற்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»15


# சர்வதேச விசாரணை எனும் பேச்சுக்கே இடமில்லை!

## நாடாளுமன்றில் சஜித் தெரிவிப்பு மஹிந்த ராஜபக்சவுக்கும் பாராட்டு



கொழும்பு, மே 20
இலங்கையின் விவகாரங்கள் இலங்கைக்குள் பேசப்பட வேண்டும். மாறாக சர்வதேச தளத்தில் எமது விடயங்களைப் பேசுவதற்கும், சர்வதேச விசாரணைகளைக் கோருவதற்கும் இடமளிக்கப் போவதில்லை இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

»15



இணுவில்

## பரராஜசேகரப் பிள்ளையாரின் தேர்த் திருவிழா கோலாகலம்

விரிவு பக்கம்:-15

# புலிகளை நினைவுகூர இடமளிக்கின்றது அரசு

## இனவாதம் விதைக்கிறார் வீரசேகர



கொழும்பு, மே 20
புலிகளை நினைவுகூருவதற்கு தற்போதைய அரசாங்கம் இடமளிக்கின்றது. இதனால், நாட்டில் இன்னொரு பிரபாகரன் உருவாகுவதற்கும் சாத்தியங்கள் உள்ளன - இவ்வாறு முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர தெரிவித்

»15

நெடுந்தீவு - குறிகாட்டுவான்

# கடற்கொந்தளிப்பால் படகுச்சேவை ரத்து!

யாழ்ப்பாணம், மே 20
நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான படகுச் சேவை கடற்கொந்தளிப்புக் காரணமாக நேற்றுக் காலைமுதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

»15

யாழ். மாநகரசபையின்

# புதிய ஆணையாளராக அரவிந்தராஜ் நியமனம்

## தொழிற்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளராக கிருஸ்ணேந்திரன்

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய ஆணையாளராக டி.சி.அரவிந்தராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், வடக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக சி.கிருஸ்ணேந்திரன் நியமனம்செய்யப் பட்டுள்ளார்.

»15



# பாடசாலை அதிபரை இடமாற்ற வேண்டாம்

## குடத்தனை மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 20
வடமராட்சி கிழக்கு குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலையின் அதிபரை இடமாற்றம் செய்யவேண்டாம் என்று வலியுறுத்தி அந்தப் பகுதி மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

»15

# நவக்கிரியில் மூலிகைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 20
வடமாகாணச் சுதேச மருத்துவத் திணைக்கள

»15

# எய்ட்ஸைக் கட்டுப்படுத்தி இலங்கை பெரும் சாதனை

## உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு

கொழும்பு, மே 20
தாயிடமிருந்து குழந்தைக்கு ஏற்படும் எய்ட்ஸ் தொற்றை இலங்கை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டியுள்ளது.
சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் 79ஆவது உலக சுகாதாரக் கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தக்

»15

# மோ.சைக்கிள் மோதி மாணவன் துயரச்சாவு

கிளிநொச்சி, மே 20
கிளிநொச்சி ஏ-35 வீதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் மோதி படுகாயம் அடைந்திருந்த 19 வயது மாணவரொருவர் மேலதிக சிகிச்சை

»15




மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 19.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4436 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 08 27 49 66 |
| விசேட எழுத்து | K |

**ஹந்தஹஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 19.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1503 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 15 31 61 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 19.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0462 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 2 9 9 0 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 19.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2542 |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 11 |
| வெற்றி இலக்கங்கள் | 08 23 26 33 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 19.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6194 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 4 7 6 8 6 4 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 19.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2224 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 39 40 78 81 |
| விசேட எழுத்து | F |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 19.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0310 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 22 37 |

# பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல் அரச அலுவலகங்களில் தடை!

## சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, மே 20

**அரசாங்க நிறுவனங்களின் திடக்கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கும் பிளாஸ்ரிக் மாசடைவதைக் குறைப்பதற்கும் புதிய விதிகளை உள்ளடக்கி சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.**

அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கு இந்தச் சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் அனைத்து அரச நிறுவனங்களிலும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்களைக் கொள்வனவு செய்வதும், பயன்படுத்துவதும் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தண்ணீர்ப் போத்தல்கள் தவிர, ஏனைய ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பொருள்கள் எவையும் அரச நிறுவனங்களுக்குள் உபயோகிக்கப்படுவதைத் தடுக்க நிறுவனத் தலைவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரச நிறுவனங்களில் திடக்கழிவுகள் அலட்சியமாக வீசப்படுவதைத் தடுத்து, அவற்றைச் சுற்றாடலுக்குப் பாதிப்பில்லாதவகையில் தரம் பிரித்து அகற்றுவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 19.05.2026 | செவ்வாய்க்கிழமை | 0902 | A | 5 3 7 2 9 0 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 19.05.2026 | செவ்வாய்க்கிழமை | 3168 | H | 12 39 74 79 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.05.2026 | செவ்வாய்க்கிழமை | J | 18 41 56 67 | 5329 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 19.05.2026 | செவ்வாய்க்கிழமை | 0998 | 18 36 49 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 19.05.2026 | செவ்வாய்க்கிழமை | | 04 22 39 56 | 4880 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 19.05.2026 | செவ்வாய்க்கிழமை | X | 14 | 24 42 49 64 | 2344 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.05.2026 | செவ்வாய்க்கிழமை | Z | 02 38 73 75 | 2994 |

# தேயிலை உற்பத்தி ஏப்ரலில் வீழ்ச்சி!

கொழும்பு, மே 20

இலங்கையின் மொத்தத் தேயிலை உற்பத்தி கடந்த ஏப்ரல் மாதத்தில் 24.22 மில்லியன் கிலோகிராமாகப் பதிவாகியுள்ளது. இது 2025ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் பதிவான 26.47 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 8.49 சதவீத வீழ்ச்சியாகும் என பிரபல தேயிலை ஏல நிறுவனமான போர்பஸ் அன்ட் வோல்கர் தெரிவித்துள்ளது. அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேயிலைப் பயிர்ச்செய்கை நிலங்களின் அடிப்படையில், தாழ்நிலத் தேயிலை உற்பத்தி 14.40 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்து, 14.76 மில்லியன் கிலோகிராமிலிருந்து 12.63 மில்லியன் கிலோகிராமாகக் குறைவடைந்துள்ளது. அத்துடன், மலைநாட்டுத் தேயிலை உற்பத்தி 6.23 மில்லியன் கிலோகிராமிலிருந்து 6.19 மில்லியன் கிலோகிராம் வரை 0.69 சதவீதத்தாலும், மத்திய நிலத்தேயிலை உற்பத்தி 5.24 மில்லியன் கிலோகிராமிலிருந்து 5.14 மில்லியன் கிலோகிராம் வரை 1.83 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளன. எனினும் 2025ஆம் ஆண்டு ஏப்ரலில் 220,423 கிலோகிராமாக இருந்த பசுந்தேயிலை உற்பத்தி, 2026 ஏப்ரலில் 238,637 கிலோகிராம் வரை 8.26 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. முதல் 4 மாத காலப்பகுதியிலும், பசுந்தேயிலையைத் தவிர உயர்நில, மத்திய நில மற்றும் தாழ்நிலத் தேயிலை உற்பத்திகள் முறையே 2.37 சதவீதம், 6.65 சதவீதம் மற்றும் 6.13 சதவீதம் என்ற அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது - என்றுள்ளது. (ச-இ)

# பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பு தடைச்சட்டத்துக்கு அங்கீகாரம்

கொழும்பு, மே 20

பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பதைத் தடுக்கும் உடன்படிக்கை (திருத்த) சட்டவரைவு, நாட்டின் அரசமைப்புக்கு முழுமையாக இணங்கக்கூடியவகையில் அமைந்துள்ளது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன நேற்றுக் காலை நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளார். அரசமைப்பின் 121 (1)ஆம் பிரிவின்கீழ் முன்வைக்கப்பட்ட சவாலொன்றைத் தொடர்ந்து, உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது என சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சட்டவரைவு ஒட்டுமொத்தமாகவும், அதேபோன்று அதில் உள்ள ஒவ்வொரு விதிகளும் அரசியலமைப்பின் எந்தவொரு பிரிவுக்கும் முரணாக அமையவில்லை என நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. (எ-இ)

# கபில சந்திரசேன வீட்டிலும் சி.சி.டி.வி. பதிவுகள் இல்லை



## நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை

கொழும்பு, மே 20

மர்மமான முறையில் உயிரிழந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன வசித்து வந்த வீட்டிலும் சி.சி.டி.வி. காட்சிகள் பதிவு செய்யப்படவில்லை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனக் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்றுக் கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

கபில சந்திரசேனவின் மரணம் தொடர்பான நீதவான் விசாரணை நேற்று கொழும்பு கோட்டை நீதவான் பசான் அமரசேன முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, விசாரணைகளின் முன்னேற்றத்தை அறிக்கை செய்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள், மரணம் சம்பவித்த வீட்டுக்குள் இரண்டு வாகன நிறுத்துமிடங்கள் ஊடாக நுழையமுடியும் என்றபோதிலும், சிசிடிவி காட்சிகளைப் பரிசோதித்ததில் 2026ஆம் ஆண்டு மே மாதம் 05ஆம் திகதிக்கும் 2026ஆம் ஆண்டு மே மாதம் 07ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநபர்கள் எவரும் அந்த வீட்டிற்குள் நுழையவில்லை என்பது தெரியவந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர். இறந்துபோனவர் வசித்த வீட்டிலிருந்த சிசிடிவி உபகரணங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அந்த சிசிடிவி உபகரணங்களிலும் காட்சிகள் எதுவும் பதிவாகவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணமடைந்தவர் வசித்த வீடு மற்றும் மரணம் சம்பவித்த வீடு ஆகியவற்றின் சி.சி.டி.வி கமரா கட்டமைப்புக்குரிய டி.வி.ஆர். கருவிகளைப் பொலிஸ் பொறுப்பில் எடுத்து, அவற்றை அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரிடம் சமர்ப்பித்து அறிக்கை கோருவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று பொலிஸார் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர். மரணம் சம்பவித்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட அடையாளம் தெரியாத மருந்து வகைகளை அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரிடம் அனுப்பி அறிக்கை கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். (எஇ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# வெள்ளப்பாதிப்பின் பின் நீர்வழி நோய்கள் பரவல்

## மக்கள் அவதானம்

**கொழும்பு, மே 20**

**நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவிவரும் மழையுடனான கால நிலை மற்றும் அதன் பின்னரான வெள்ளப்பெருக்கு நிலைமைகளைத் தொடர்ந்து, நீர் மூலம் பரவக்கூடிய தொற்றுநோய்கள் வேகமாகத் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகச் சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது.**

இதுகுறித்து தேசிய தொற்று நோயியல் பிரிவின் சிரேஷ்ட ஆலோசகரும் மருத்துவ நிபுணருமான மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவிக்கையில், வெள்ளப்பெருக்குகளுக்குப் பின்னர், அடுத்த இரண்டு வார காலப்பகுதிக்குள் தொற்று நோய்கள் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. வெள்ளநீர் மற்றும் மாசடைந்த சூழல் காரணமாக எலிக்காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை உள்ளிட்ட நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வெள்ளநீர் மற்றும் மாசடைந்த குடிநீர் மூலம் நோய்கள் பரவக் கூடும் என்பதால், கொதிக்க வைத்து ஆறவைக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப் பட்ட நீரை மட்டுமே பருக வேண்டும். சேற்று நீரில் நடப்பதைத் தவிர்க்க வேண்டும். டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுக்க வீட்டைச் சுற்றியுள்ள வளாகங்களைத் தூய்மையாக வைத்திருக்கவேண்டும் - என்றார். (ச-இ)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 20

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் முயற்சியாண்மை மற்றும் சிறு வணிக முகாமைத்துவத்தில் உயர்சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அனைவரும் 16வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும். அத்துடன் பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருக்கவேண்டும். க.பொ.த. சாதாரன தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு சித்திகளுடன் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியினைக் கொண்டிருக்கவேண்டும். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் 30 அலகுகளைக் கொண்ட மட்டம்1 அல்லது அதற்கு மேற்பட்ட ஏதாவது சான்றிதழ் கற்கை நெறியினை நிறைவு செய்திருக்கவேண்டும். என்.வி.க்யூ3 தகைமையை அல்லது பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமனான அல்லது உயர்கல்வித் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் ஜீன் மாதம் 15ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாண பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-41)

# ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு, மே 20

ஹலியகொட, வலவிட்டவத்த பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் கெட்டஹெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினர் இந்தக் கொலையைச் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## முப்படைகளில்

# 5,289 பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, மே 20

யுத்த வீரர்கள் நினைவுதினத்தை முன்னிட்டு, நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய முப்படைகளின் 5,289 பேருக்கு அவர்களது அடுத்த பதவிநிலைகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

முப்படைத் தளபதிகளின் பரிந்துரைகளின் பேரிலும் முப்படைகளின் நிர்வாக நடைமுறைகளுக்கு அமைவாகவும் இப்பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



# 104 மெட்ரோ பஸ்கள் ஓகஸ்டில் இறக்குமதி

நாட்டின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வினைத் திறன்மிக்கதாக மாற்றுவதற்காக, எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் 104 புதிய மெட்ரோ பேருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. அதற்குரிய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது. தற்போது மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு கடவத்தை மற்றும் ரத்மலானை போன்ற பகுதிகளில் புதிய மெட்ரோ சேவை முனையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அதனுடன், ஓகஸ்ட் மாதத்தில் இந்தப் பேருந்துகளைப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம், நாட்டின் பொதுப் போக்குவரத்தில் திருப்புமுனையை ஏற்படுத்த முடியும் என்றும் போக்குவரத்து அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# குரங்குச்சேட்டையளுக்கு இடமில்லை!

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில முந்தின காலத்தில வந்ததை விடக் கூடுதலாச் சனங்கள் வந்தவை. நினைவேந்தல் உள்ளுக்குள்ள ரெண்டாயிரம் விளக்குகள் எரிஞ்சாலும், அதுக்கு வெளியால ஆயிரக்கணக்கான ஆக்கள் நிண்டு அஞ்சலி செய்தவை. இது எங்கட இனத்தின்ர ஒட்டுமொத்த வலியையும், ஒற்றுமையையும் உலகத்துக்கு காட்டியிருக்கு.

அரிசிக்குள்ள அங்க இஞ்ச எண்டு கல்லுக் கிடபடுற மாதிரி இப்பிடி அஞ்சலி செலுத்த வந்தவையில சில ரிக்ரொக், இன்ஸ்டகிராம் பைத்தியங்களும் வந்து, ஒரே வீடியோவா எடுத்துக்கொண்டும் நிண்டவை. அவை சில இயக்கப்பாட்டுகள், முள்ளிவாய்க்கால் பாட்டுகள் எண்டதுகளைப் போட்டு அதுக்கேத்த விதமா அக்சனெல்லாம் செய்து கொண்டிருந்தினமே தவிர, மனசார அஞ்சலிக் கேலை. அவையின்ர நோக்கமெல்லாம் அந்த வீடியோவைப் போட்டு வைரலாக்க வேணும். அந்த ஒரே எண்ணத்தோட இப்பிடி போனும் கையுமா திரிஞ்ச அந்த ரிக்ரொக்வாசியள் தங்களைச் சுத்தி கண்ணீரும் கம்பலையுமா ஒரு பெருங்கூட்டமே நிண்டு ஒப்பாரி வைச்சு, தங்கட வேதனையைக் கொட்டுது எண்டு கணக்கிலயே எடுக்கேலை. 'இண்டைக்கு ரிக்ரொக்கில போட ஒரு ' கொண்டெண்ட் 'கிடைச்சிட்டு' எண்ட நினைப்பிலதான் அவை இருந்தினமே தவிர, மற்றப்படி இப்பிடியான சிலர் இன உணர்வோடயோ, இல்லாட்டி இனப்படுகொலைக்கு நீதிகேட்டோ அங்க வரேலை.

ஏனெண்டால் முள்ளிவாய்க்காலை விட்டுப் போனதும், அவையள் தங்கட பேஸ்புக், யூரியூப், ரிக்ரொக், இன்ஸ்டாகிராமில போட்ட வீடியோக்கள் அவை என்ன மாதிரியான மனநிலையோட வந்தவை எண்டதை வடிவாக் காட்டினது. அவைக்கு இதொரு பொழுதுபோக்கு. பூனைக்கு விளையாட்டு. சுண்டெலிக்கெல்லோ சீவன் போகுது எண்ட மாதிரித்தான் சோசல்மீடியாக்காரர் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு படங்காட்டுற பொழுதுபோக்கா மாத்துகினம். இதெல்லாம் எங்கட நீதிக்கான குரலை கேலியா மாத்தக்கூடிய ஆபத்தான கட்டத்துக்கு கொண்டுபோகும். ஈவிரக்கம் பாராமல் இனிமேல் எந்தவொரு நினைவேந்தலுக்கும் இப்பிடிப் படங்காட்டுற குருப்புக்கு தடை போடவேணும். ஏனெண்டால் முள்ளிவாய்க்கால் எண்டது ஒரு இனத்தின்ர துயரக்குறியீடு., அதுக்குள்ள இப்பிடியான குரங்குச்சேட்டையளுக்கு இடங்குடுத்தால், நினைவேந்தலின்ர மகிமையே கெட்டுபோகும். பாம்புக்குப் பல்லைப் பிடுங்கினால் விசம் இருக்காதெல்லோ. அதைமாதிரி நினைவேந்தலுக்கு வாறவை போனோட உள்ளுக்க வரேலாது எண்டு கொஞ்சம் இறுக்கமா நிண்டால், உந்த ரிக்ரொக்பைத்தியங்களிண்ட சேட்டையைக் குறைக்கலாம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தாண்டு தேயிலையால் 1.51 பில். டொலர் வருமானம்

கொழும்பு, மே 20

இலங்கை வரலாற்றிலேயே மிக அதிகப்படியாக கடந்த 2025ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதி வருவாயில் 1.51 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது-

தேயிலை ஏற்றுமதித் துறை இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் குறிப்பிட்டவொரு இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. தேயிலை ஏற்றுமதியை மேலும் அதிகரிப்பது குறித்து ஆராய்வதற்காக தேசியமட்டக் குழுவொன்று செயற்படுகிறது. அந்தக்குழு அண்மையில் கூடியபோது, 2030 ஆம் ஆண்டாகும் போது தேயிலை உற்பத்தியை 400 மில்லியன் கிலோ வரை உயர்த்துவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதோடு, ஏற்றுமதி வருமானத்தை 2.5 பில்லியன் டொலர்வரை அதிகரிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய யுத்த நிலைமை இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் குறிப்பிட்டளவு தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறப்பட்டது. எனினும் தேயிலை ஏற்றுமதியில் யுத்த நிலைவரம் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. 2026ஆம் ஆண்டு முதலாம் காலாண்டில் தேயிலை ஏற்றுமதியூடான வருமானம் 351.58 மில்லியன் டொலராகும். இது ஏற்றுமதி வருமானத்தில் சிறு வீழ்ச்சியைக் காண்பிக்கிறது. காலநிலை, உரப்பற்றாக்குறை உள்ளிட்ட காரணிகளும் இதில் தாக்கம் செலுத்துகின்றன. எனவே தான் இம்முறை தேயிலைக்கான உரமானியத்தை வழங்குவதற்காக 2000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உர நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் கடந்த ஏப்ரலில் தேயிலை அறுவடை அதிகரித்துள்ளது. அதன் பிரதிபலனை இம்மாத இறுதியில் பெற முடியும் என்று நம்புகின்றோம்- என்றார். (ச-இ)

# திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரல்

கொழும்பு, மே 20

இலங்கை சுங்கத் திணைக்களத்தில் உதவிச் சுங்க அத்தியட்சகர் (தரம் II) பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு விண்ணப்பிப்பவர், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையதளம் (WWW.DOENETS.LK) ஊடாக ஒன்லைன் மூலம் மட்டும் எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி இரவு 9 மணி வரை விண்ணப்பிக்க முடியும். இதற்கு விண்ணப்பிப்போர் 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட ஒரு பட்டம் (குறைந்தது 3 வருட கற்கைக்காலம்), க.பொ.த. (சா/தர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் 'சி' சித்தி அல்லது க.பொ.த (உ/தர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் 'எஸ்' சித்தி பெற்றிருத்தல் அவசியம். விளையாட்டுத்துறையில் தேசிய அல்லது சர்வதேச ரீதியில் சாதனை படைத்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சையின் போது மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், மே 20

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் வைகாசி மாதத்திற்கான சதுர்த்தி உற்சவம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு அபிஷேகங்களுடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று விநாயகப்பெருமான் வீதியுலா வருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-63)

# 14 கிலோ போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது



கொழும்பு, மே 20

14 கிலோகிராமுக்கும் மேற்பட்ட நிறையுடைய குஷ் ரக போதைப்பொருளுடன் இருவர் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இருவரிடமிருந்தும் இரண்டு பயணப்பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 கிலோகிராம் 562 கிராம் குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் கொழும்பு தெமட்டகொடப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். (க-இ)

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு நட்டஈடு!

கொழும்பு, மே 20

கடந்த சில நாள்களாகப் பெய்த மழையால் பல மாவட்டங்களில் விவசாய நிலங்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவாக நட்டஈடு வழங்க அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக விவசாய மற்றும் கால்நடை வளப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளதாவது

சீரற்ற வானிலையால் சேதமடைந்த பயிர்நிலங்களுக்கான இழப்பீடுகளை விவசாய மற்றும் கமநல காப்புறுதிச்சபையின் ஊடாக மிகக் குறுகிய காலத்துக்குள் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கைகளுக்குக் கொண்டு சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாய காப்புறுதிச்சபை மற்றும் கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகள் ஊடாக, சேதமடைந்த அனைத்துப் பயிர் நிலங்களையும் இரண்டு வாரங்களுக்குள் முழுமையாக அறிக்கைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, தங்களது பயிர்கள் சேதமடைந்துள்ள விவசாயிகள், அதுகுறித்த விவரங்களைத் தத்தமது பகுதிக்குரிய உரிய அதிகாரிகளிடம் உடனடியாக வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட வயல் நிலங்களின் விவரங்கள் கிடைத்தவுடன், காப்புறுதிச்சபையின் மூலம் தாமதமின்றி நட்டஈடு வழங்கப்படும் - என்றார். (ச-இ)

# மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 20

வரலாற்றுச் சிறப்புப்பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த மாதம் நடைபெற்ற நிலையில் மண்டலாபிஷேக பூர்த்தி எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை தொடக்கம் நடைபெறவுள்ளது. காலை 5 மணி முதல் விசேட வழிபாடுகள் மற்றும் 1008 சங்காபிஷேகம், ஏனைய அபிஷேகத்திரவியங்களால் அம்பாளுக்கு அபிஷேகம் என்பனவும் நடைபெறவுள்ளன. அன்றைய தினம் மாலை 5 மணிக்கு விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து அம்பாளுக்குத் திருவூஞ்சல் இடம்பெற்று அம்பாள் திருமஞ்சத்தில் திருவீதி வலம் வருவார். அன்றைய தினம் இரவு 8 மணிக்கு அம்பாள் சந்நிதியின் உட்பிரவாகத்தில் விசாகப் பொங்கல் நடைபெறவுள்ளது. (ச-131)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன்-மனைவிக்கிடையே பரஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள்வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். மூத்த சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாகமுடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கூடிய வரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் - மனைவிக்கிடையில் பரபஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியஅனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கையாக இருக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# தொலைநோக்கு அவசியம்

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தீவிரமடைந்துள்ள போர்ச்சூழல், உலகப் பொருளாதாரத்தை உலுக்கி வருவதுடன், மீண்டெழுந்து வரும் இலங்கையின் பொருளாதாரத்திலும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க வெளியிட்டுள்ள அண்மைக்கால உத்தியோகபூர்வத் தரவுகள், நாடு மீண்டும் ஒரு கடுமையான சவாலை நோக்கி நகர்வதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

கடந்த ஆண்டு முழுவதும் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த எரிபொருள் இறக்குமதிச் செலவு 1.5 பில்லியன் அமெரிக்க டொலராக மட்டுமே காணப்பட்ட நிலையில், இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலேயே அது ஒரு பில்லியன் டொலரைக் கடந்துள்ளது. இதில் ஏனைய இரு தனியார் விநியோகஸ்தர்களின் இறக்குமதிச் செலவுகள் சேர்க்கப்படவில்லை. அவை இணைக்கப்பட்டால் இந்தத் தொகை இன்னும் பல மடங்கு அதிகரிக்கும் என்பது நிதர்சனம்.

இந்த நிலைமை வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுவரும் இலங்கை போன்ற நாட்டுக்கு சாதாரணமல்ல. இந்த நிலைமையைக் கையாண்டு, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதும் அவ்வளவு இலகுவானதல்ல. இந்த இக்கட்டான சூழ்நிலையில், நாடு மீண்டும் ஒரு பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்காமல் இருக்க வேண்டுமாயின், அரசியல்வாதிகளும் பொதுமக்களும் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டியது அவசியமாகும். மத்திய கிழக்கில் நிலவும் தற்போதைய அசாதாரண போர்ச்சூழலானது அடுத்த மூன்று மாதங்களுக்குள் தணிந்துவிடும் என்ற கணிப்பின் அடிப்படையிலேயே மத்திய வங்கி தற்போதைய பொருளாதார இலக்குகளைத் தயாரித்துள்ளது. ஒருவேளை இந்த நெருக்கடி நீடித்தால், நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் கடுமையான தாக்கம் ஏற்படும்.

இத்தகையதொரு தேசிய இக்கட்டில், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இதை ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அரசாங்கத்தின் கொள்கைகளை வெறுமனே விமர்சிப்பதையும், உலகளாவிய காரணிகளால் ஏற்படும் விலை ஏற்றங்களை, உள்நாட்டு அரசியல் தோல்விகளாக மட்டும் சித்தரித்து மக்களிடையே வீண் பீதியையோ அல்லது வன்முறையையோ தூண்டுவதைத் தவிர்க்க வேண்டும். அதேவேளை, 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியும், எரிபொருள் வரிசைகளும் நாட்டு மக்களுக்குக் கற்பித்த பாடங்கள் இன்னும் மறையவில்லை. உலகச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை பீப்பாய்க்கு 100 டொலரை தாண்டிச் செல்லும் இந்த வேளையில், பொதுமக்கள் தங்கள் தினசரி நுகர்வுப் பழக்க வழக்கங்களில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது அவசியம். வல்லரசு நாடான இந்தியாவே கட்டுப்பாடுகளைக் கொண்டுவர எத்தனிக்கும் இந்த வேளையில், இலங்கை மிக மிக அவதானத்துடன் இந்த நிலைமையைக் கையாள வேண்டியிருக்கும். சுயக்கட்டுப்பாடும், தூரநோக்குச் சிந்தனையுமே இந்த இக்கட்டான சூழலில் இருந்து தேசத்தைப் பாதுகாக்கும் கேடயங்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## பொய்யாமொழி

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி**

**பொருள்:** முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.



# ரின் வரி இலக்கத்துக்கு 13 மில்லியன் பேர் பதிவு



கொழும்பு, மே 20

**இலங்கை அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கையின் கீழான அடையாள எண்ணுக்கு 13 மில்லியனுக்கும் அதிகமானோர் பதிவுசெய்துள்ளனர் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

ரின் இலக்கம் வருமான வரி சார்ந்த அனைத்துச் செயற்பாடுகள், வாகன இறக்குமதி மற்றும் வாகனப் பதிவு நடவடிக்கைகள், புதிய வங்கிப் பரிவர்த்தனைகள் மற்றும் கணக்குகளை ஆரம்பித்தல், வணிகங்களுக்கான இறக்குமதி / ஏற்றுமதி உரிமங்களைப் பெறுதல், உயர் பதவிகளுக்கான வேலைவாய்ப்பு நடைமுறைகள் என்பவற்றின் பயன்பாட்டுக்காக கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ரின் இலக்கத்துக்காக ஒன்லைன் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்கும் போது, தங்களது வருமானம், தொழில் அல்லது வதிவிட முகவரிகள் குறித்து தவறான மற்றும் போலியான தகவல்களைச் சமர்ப்பிக்கும் நபர்களுக்கு எதிராகத் தாமதமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தகவல்களைத் திட்டமிட்டு மறைப்பதும் அல்லது போலியான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ரூபாவின் பெறுமதி தொடர் சரிவு

கொழும்பு.மே.20

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றுமுன்தினம் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் இன்றைய நாணயமாற்று விகித தரவுகளின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 326.74 ரூபாவாகும். அதன் விற்பனை விலை 334.26 ரூபாவாக பதிவாகியுள்ளது. மத்திய கிழக்கில் தொடர்ந்தும் நீடித்துவரும் போர்ச்சூழல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துவருகின்றது. (ச-இ)

## பிரதமர் ஹரிணி பிரிட்டன் பயணம்

கொழும்பு.மே.20

இங்கிலாந்தின் லண்டன் நகரில் நடைபெறவுள்ள அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். பிரதமருடன் அவரது உத்தியோகபூர்வ அதிகாரிகள் குழுவைச் சேர்ந்த மேலும் இருவர் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளனர். லண்டன் மாநாட்டுஅமர்வுகளில்கலந்து கொண்டு, தங்களது உத்தியோகபூர்வ பயணப் பணிகளை நிறைவுசெய்த பின்னர், பிரதமர் உள்ளிட்ட குழுவினர் எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதி மீண்டும் நாட்டை வந்தடையவுள்ளனர். (ச-இ)

## தேங்காய் விலை சடுதியாக வீழ்ச்சி

தென்மராட்சிப் பிரதேசத்தின் பொதுச் சந்தைகளில் தேங்காய்களின் விலை கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக உள்ளூர் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போதைய நிலைவரப்படி, சந்தைகளில் ஒரு பெரிய அளவிலான தேங்காய் 80 ரூபா என்ற மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. (ச-9)



# ஒரே டிஜிற்றல் தளத்தில் இலங்கைத் தூதரகங்கள்

அரசாங்கத்தின் டிஜிற்றல் உருமாற்றக் கொள்கைக்கு இணங்க, உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் பணியகங்களை ஒரே பொதுவான மற்றும் பாதுகாப்பான இணையப் பின்னணிக்குள் கொண்டுவரும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திவைத்து அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிக்கையில், அரசாங்க நிறுவனங்கள் மக்களுக்கு அதிக அணுகல் திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடன் சேவை செய்யும் முறையை மாற்றுவதாகும். இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, 7 நாடுகளிலுள்ள தூதரகங்களின் இணையத்தளங்கள் புதிய கட்டமைப்போடு இணைக்கப்பட்டுள்ளன- என்றார். (ச-இ)

நாளை
வியாழக்கிழமை- சித்திரை 07
21.05.2026
சுபநேரம் : 07.22 - 08.52
ராகுகாலம் : 01.22- 02.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மணல் மாபியாக்களுக்குத் தீர்வில்லையேல் கட்டுமானப் பணிகளில் இடைவிலகுவோம்

## தேசிய கட்டுமானச் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளை எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், மே 20**

**வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிலவிவரும் கடுமையான மணல் பற்றாக்குறை மற்றும் கட்டுப்பாடற்ற விலை உயர்வு காரணமாக, மாகாணம் முழுவதுமுள்ள அனைத்து அரசாங்கக் கட்டுமானப் பணிகளையும் முழுமையாக இடைநிறுத்தப் போவதாக இலங்கை தேசிய கட்டுமானச் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அந்தச் சங்கத்தின் தலைவர் ந.நந்தரூபன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தற்போது வட மாகாணத்தில் நிலவிவரும் செயற்கையான மணல் பற்றாக்குறை ஒட்டுமொத்த கட்டுமானத் துறையையும் மிகக் கடுமையாகப் பாதித்துள்ளது. இதனால் அரசாங்கத்தின் முக்கியமான அபிவிருத்தித் திட்டங்கள், பொது உட்கட்டமைப்புப் பணிகள் மற்றும் தனியார் துறை கட்டடப் பணிகள் அனைத்தும் பெரும் தாமதத்தை எதிர்கொண்டுள்ளன.

அதிகாரிகளின் முறையற்ற கண்காணிப்புக் காரணமாக, சட்டவிரோத மணல் விற்பனை மற்றும் 'மணல் மாபியா' ஆகியவற்றின் ஏகபோக ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

இதனால், ஒப்பந்தக்காரர்களும் பொதுமக்களும் அநியாயமான முறையில் நிர்ணயிக்கப்படும் அதிக விலைக்கு மணலை வாங்கவேண்டிய கடுமையான நிதி நெருக்கடிக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த மணல் நெருக்கடிக்குத் தீர்வு காணக் கோரி, வடமாகாண ஆளுநர், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் நாம் பல முறை பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம். இருப்பினும், மீண்டும் மீண்டும் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை அதிகாரிகள் தரப்பிலிருந்து எந்தவொரு பயனுள்ள அல்லது நடைமுறைச் சாத்தியமான தீர்வும் வழங்கப்படவில்லை.

அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வடமாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியாயமான, நிலையான கட்டுப்பாட்டு மணல் விலையை உடனடியாக நிர்ணயிக்கவேண்டும். மணல் விநியோகம் மற்றும் பகிர்மானத்தை வெளிப்படையான முறையில் எவ்விதத் தடையுமின்றித் தொடர்ச்சியாக உறுதிசெய்ய வேண்டும். சட்டவிரோத மணல் கடத்தல், விற்பனை மற்றும் ஏகபோகக் கறுப்புச் சந்தை வணிகத்தை உடனடியாகத் தடுக்கவேண்டும். இந்த விடயங்களுக்கு அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அரசாங்கம் முறையான தீர்வை வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில், வட மாகாண ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, மாகாணத்தில் உள்ள அனைத்து அரசாங்கக் கட்டுமானப் பணிகளையும் முற்றாக இடைநிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் - என்றுள்ளது. (ச)

# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண தொழினுட்பவியல் கல்லூரியின் இரண்டாம் அரையாண்டிற்கான(என்.வி.க்யூ. 3,4) கற்கைநெறிகள் எதிர்வரும் ஜுலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. மோட்டார் சைக்கிள் தொழினுட்பவியலாளர், மின்னியல் தொழினுட்பவியலாளர், கையடக்கத் தொலைபேசி திருத்துநர், ஆடை தைத்தல், கள உதவியாளர்களுக்கான விவசாயம், கணனி வலையமைப்பு, தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர், கணிய அளவை உதவியாளருக்கான சான்றிதழ், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயற்சிநெறி ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கோரப்படவுள்ளதனால் பயில விரும்புவோர் தாமதமின்றி தொழினுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துக்கு வந்து விண்ணப்பிக்கமுடியும். மேலதிக விபரங்களுக்கு 021 222 2358, 0212212403 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# 18 கிலோ கேரளக் கஞ்சா முள்ளிப் பகுதியில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 20

வடமராட்சி முள்ளிப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட 18 கிலோகிராம் கேரளக் கஞ்சா விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து முள்ளிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட 18 கிலோகிராம் கேரளக் கஞ்சா போதைப்பொருள் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-100)

# இனப்படுகொலைக்கான நீதி குரல் கொடுப்பது எம் கடமை!

## பிரிட்டன் எம்.பி. உமா குமாரன் தெரிவிப்பு

கொழும்பு, மே 20

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிசெய்யப்படுவதை முன்னிறுத்தி நாம் குரலெழுப்பவேண்டும். அவர்களுக்காக இதனைச் செய்வது உயிருடன் இருப்பவர்களின் கடமையாகும் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமா குமாரன் தெரிவித்துள்ளார்.

மே 18ஆம் திகதி தமிழ் இனப்படுகொலை நினைவுநாளில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இறுதிக்கட்டப்போரின்போது இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களை 17 ஆண்டுகளின் பின்னர் நினைவுகூருகிறோம். போரிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வலியும், வேதனையும் இப்போதும் தொடர்கிறது. இது உலகளாவிய ரீதியில் பரந்துவாழும் புலம்பெயர் தமிழர்களின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. குழந்தைகளின் எலும்புக்கூடுகள் உள்ளடங்கலாக மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட செம்மணி, சித்துபாத்தி மனிதப்புதைகுழியானது, தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மனிதாபிமான மீறல்களை நினைவூட்டுகிறது. நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு உண்மையையும், நீதியையும் உறுதிப்படுத்தவேண்டியது அவசியமாகும். எனினும் இன்னமும் மௌனமும், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்குமே தொடர்கிறது. இத்தகைய மீறல்கள் மீண்டும் நிகழாத, அமைதியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அதேபோன்று மீறல்களிலிருந்து உயிர்பிழைத்தவர்களின் கதைகள் மௌனமாக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்வோம்- என்றார். (ச-இ)



# இந்துக்களின் துடுப்பாட்டச்சமர்

யாழ்ப்பாணம், மே 20

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 'இந்துச் சகோதரர்களின் போர்' எனும் பெருந்துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். கடந்த வாரம் நடைபெறவிருந்த போட்டி காலநிலை சீரின்மையால் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# குளத்தை ஆக்கிரமித்து தனிநபர்கள் அடாவடி

## கிராம மக்கள் விசனம்

வவுனியா, மே 20

சுமார் 50 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமைவாய்ந்த ஆலங்குளத்தை தனிநபர்கள் ஆக்கிரமித்து சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். ஆசிக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தனிநபர்களால், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குளம் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டுவருவகின்றது. வரலாற்றை முற்றிலும் அழித்து, குளத்தை ஆக்கிரமிக்கும் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். ஆலங்குளத்தைப் புனரமைப்பதற்காக கடந்த காலங்களில் நிதி ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், குறித்த அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே இவ்விடயத்தில் அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டால், விவசாயிகளும், கிராம மக்களும் எதிர்காலத்தில் மிக மோசமான வாழ்வாதாரப் பாதிப்புகளைச் சந்திக்க நேரிடும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபனிடம் கேட்டபோது, கிராமமக்களால் எமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 20

தமிழின அழிப்பின் 17ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. இறுதிப்போரில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து, பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட, ஏனைய சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு, கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், முன்னாள் போராளிகள், தமிழ் தேசிய உணர்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ச-27,66)





யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டப் போட்டியில், பருத்தித்துறை பிரதேச செயலக பெண்கள் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (க)




சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையால், ஈழத்தில் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான் ஈழநல்லூர் பி. எஸ்.பாலமுருகன் -'ஞானபண்டித இசை ஞானகேசரி' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (க-17)



முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நேற்றுமுன்தினம் வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. நிகழ்வில் பொதுமக்கள், அடியார்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு போரில் உயிரிழந்த மக்களுக்கு தீபமேற்றி ஆத்மசாந்தி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (எ-110)

பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ. சீ. த. பாடசாலையில் கடந்த வருடம் 2025ஆம் ஆண்டில் சுற்றாடல் முன்னோடிக் குழுவில் தமது மஞ்சள் வர்ணச் செயற்பாட்டைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்குரிய சின்னங்கள் நேற்றுமுன்தினம் சூட்டப்பட்டன. (க-9)



## தமிழரசுக்கட்சியின்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு


கொழும்பு, மே 20

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்றுப் பிரதேச கிளையின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் கஞ்சி வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் கதிரவெளியில் நடைபெற்றன.


இதில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறிநாத், இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதேசசபைகளின் தவிசாளர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், மற்றும் பிரதேசசபைகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள், எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச)



ஊர்காவற்றுறை பிரதேசசபையின் திரு இருதய ஆண்டவர் முன்பள்ளியின் 2026ஆம் ஆண்டுக்கான வருடாந்த சிறுவர் சந்தை நேற்றுமுன்தினம் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. (க-9-சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, பருத்தித்துறை நகர்ப் பேருந்து நிலையப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பொதுச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது. (சு-100,20-சி)


# நினைவேந்தல் நிகழ்வில் 100 பேருக்கு அரிசிப்பொதி

யாழ்ப்பாணம், மே 20

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில், உரும்பிராயில் அமைந்துள்ள விடுதலைப்போராளி பொன். சிவகுமாரின் சிலை அருகில் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் பொன். சிவகுமாரின் சிலைக்கு மாலை அணிவித்து, முள்ளிவாய்க்கால் நினைவாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது. அத்துடன் 100 பேருக்கு அரிசிப் பொதிகளும் வழங்கப்பட்டன.


நிகழ்வில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (சு-20)



முள்ளிவாய்க்கால் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெருகல், ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில், முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்மா சாந்தி வேண்டி ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பரிமாறப்பட்டது. (சு-40-சி)



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, அதன் தலைமைச் செயலகம் முன்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது. (சு-இ)








முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவேந்தல் நிகழ்வு, சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. போரில் உயிரிழந்த பொதுமக்களின் நினைவாகப் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது. (சு-214)

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு, குப்பிழான் இளைஞர்களின் ஏற்பாட்டில், குப்பிழான் சந்தியில் பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பரிமாறப்பட்டது. (சு-66)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனக்கு எல்லாம்
தெரியும்
என்று எண்ணுபவன்
எதையும் கற்கமுடியாது.

- எபிக்டெட்டஸ்

# புதன் பொய்கை

20.05.2026
புதன்கிழமை

# தாய்மையா? கல்வியா?

■ யதுஷா சூரியகுமார்



இடையே காலை 8 மணி விரிவுரைக்காகப் பல்கலைக்கழகம் கிளம்பும் போதே என் மனம் கனக்கத் தொடங்கிவிடுகிறது. பையில் இருக்கும் புத்தகங்களைவிட வீட்டில் நான் என் மகளுக்காக எடுத்துவைத்து விட்டு வரும் தாய்ப்பால் புட்டிகளின் அளவுதான் என் அன்றாடக் கவலையாக இருக்கிறது. பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலைக் கடக்கும்போது ஒரு மாணவியாக என் அறிவைத் தேடும் ஆர்வம் ஒரு புறம் இருந்தாலும் ஒரு தாயாக என் மகளின் பசி குறித்த பயம் மறுபுறம் என்னை அழுத்துகிறது.

## தினமும் நடக்கும் போராட்டம்

விரிவுரைகளுக்கு இடையில் கிடைக்கும் அந்தச் சிறு இடைவேளை மற்றவர்களுக்குத் தேநீர் அருந்தும் நேரமாக இருக்கலாம். ஆனால் எனக்கு அது ஒரு மரதன் ஓட்டம். இடைவேளை தொடங்கியதும் என் கணவர் எனக்காகப் பல்கலைக்கழக வாயிலில் காத்திருப்பார். அவர் என்னை ஏற்றிக்கொண்டு வீட்டிற்கு விரைவார். வீட்டிற்குச் சென்று பசியால் காத்திருக்கும் என் மகளுக்கு பாலூட்டி விட்டு அவளது மழலை முகம் பார்த்து மீண்டும் ஒரு முறை முத்தமிட்டு விட்டு அடுத்த விரிவுரை தொடங்குவதற்குள் மூச்சிரைக்க மீண்டும் பல்கலைக்கழகத்துக்கு வந்து அமர்கிறேன். பேராசிரியர் விளக்கும் பாடங்கள் ஒரு காதில் விழுந்தாலும் என் உடல் உளைச்சலும் அதைவிட மகள் பசியால் அழுகிறாளோ? என்கிற மன உளைச்சலும் என்னை சித்திரவதை செய்கின்றன. இது வெறும் உடல் அலைச்சல் மட்டும் அல்ல. ஒரு பெண்ணாக நான் விரும்பிக் கற்கும் கல்விக்கும் நான் நேசிக்கும் என் தாய்மைக்கும் இடையில் ஒரு பெரும் போராட்டம்.

யாழ்.பல்கலைக்கழகம் எத்தனையோ புரட்சிகரமான கருத்து க்களைப் பேசுகிறது. சமத்துவம் மற்றும் பெண்ணியம் பற்றி சமூகவியல் வகுப்புகளில் நாம் விவாதிக்கிறோம். ஆனால் அதே பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு தாய் தன் குழந்தைக்குப் பால் ஊட்ட ஒரு சிறிய பிரத்தியேகமான இடம் கூட இல்லை என்பதுதான் கசப்பான உண்மை.

திருமணம் முடித்து குழந்தை பெற்ற பின்னும் பெண்கள் கல்வியைத் தொடரலாம் என்ற நிலை வந்த பின்பும் அவர்கள் எதிர்கொள்ளும் இத்தகைய நடைமுறைச் சிக்கல்களை கண்டுகொள்ள யாருமே இல்லை.

ஒதுக்குப்புறமான இடங்களைத் தேடி அலையும் மன உளைச்சலையோ அவசர அவசரமாக பல்கலைக்கழகத்திற்கும் வீட்டிற்கும் இடையில் அலையும் அலைச்சலையோ ஒரு மாணவி ஏன் அனுபவிக்க வேண்டும்? என்பதே எனது மனதை உருக்கும் ரணமாக உள்ளது.

இதில் எங்களைப் போன்ற பல்கலைக் கழகம் செல்லும் மாணவிகளுக்கு அதாவது தாய்ப்பால் ஊட்டும் தாய்மார் களுக்கு பிரமாண்டமான பெரிய கட்டடங்கள் தேவையில்லை. அது எமது கோரிக்கையும் இல்லை மாறாக,

ஒரு சிறிய பாதுகாப்பான அறை

அமர்வதற்கு ஒரு நாற்காலி

பாலைச் சேமிக்க அல்லது சுத்தம் செய்யத் தேவையான அடிப்படை வசதி இவையே எமது அபிலாஷைகளாக உள்ளன. இவை இருந்தால் போதும் விரிவுரைகளுக்கும் வீட்டிற்கும் இடையிலான இந்த ஓட்டம் குறையும். அத்துடன் உங்களால் இன்னும் நிம்மதியாகக் கல்வியில் கவனம் செலுத்தமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்லாது ஏனைய பல் கலைக்கழகங்களிலும் தாய்ப்பால் ஊட்டும் மாணவிகளின் நிலையைக் கருத்திற்கொண்டு 'தாய்ப்பால் ஊட்டும் அறை' ஒன்றை அமைக்கவேண்டும். பல்கலைக்கழகம் என்பது வெறும் அறிவு தேடும் இடம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. எனவே இது ஒரு மாற்றத்துக்கான வித்தாக எழட்டும்.

## சிங்கப் பெண்ணிவள்



சாதனை புரிந்திட்ட
சிங்கப் பெண்ணே! ஈஸ்வரி!
பார்வைக்குச் சவால் விட்டு
பாரினையே விழிக்க வைத்தாய்!
பெண்ணினத்தின் விடிவெள்ளியே!
பாக்கு நீரிணையும் உந்தன்
பெயர் சொல்லும்!
சாதனைகள் தொடரட்டும்!
புகழது பரவட்டும்!
வாழ்த்துகின்றோம் வாழி!

திருமதி தவமணிதேவி கணேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்

பகுதி - 5

## இயற்கையான ஊடாட்டங்கள்



கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்டு பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப்படிப்பை முதற்தர சித்தியுடன் நிறைவு செய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக தொழிற்றுறையில் குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்பு பகுப்பாய்வுத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கணிப்பொறி தொற்றுநோயியல் ஆராய்ச்சி கல்வியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் துறையின் இணைப் பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

■ கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன்


முதலில், இயற்கையான ஊடாட்டங்கள் (natural interaction) என்ற கருத்தைப் பரிசீலிப்போம். மனிதர்கள் கணனி அமைப்புகளுடன் இயல்பாகவும் மனிதர்களுக்கிடையேயான தொடர்பைப் போலவும் தொடர்பாடல் செய்யும் முறைகளை இத்தொடர் குறிக்கிறது. அதாவது, ஒரு மனிதர் இன்னொரு மனிதருடன் ஊடாடுவதுபோல அவர் ஒரு கணினியுடன் ஊடாடும்போது அதை 'இயற்கையான ஊடாட்டம்' என்கிறோம். இதன் மிக முக்கியமான பகுதி இயற்கை மொழிகளைப் புரிந்து கொள்ளல் (Natural Language Processing (NLP)) ஆகும்; அதாவது, சாதாரண மனித மொழிகளை ஒரு கணினி புரிந்துகொள்வதும், விளக்குவதும், உருவாக்குவதும் இதனுள் அடங்குகின்றன. ஆனால் 'இயற்கையான ஊடாட்டங்கள்' என்பது மொழியுடன் மட்டும் தொடர்புடையதல்ல. இதன் கீழ் பேச்சையும் குரலையும் புரிந்து கொள்ளுதல் (speech and voice recognition), கணனிப் பார்வை (computer vision), பன்முக ஊடாடல் (multimodal interaction, அதாவது உரை, ஒலி, படம், சைகைகள் போன்றவற்றை ஒன்றிணைந்த தொடர்பாடல்), மனிதரோபோட் தொடர்பாடல் (Human-Robot Interaction (HRI)), தாக்கமுறு கணினியியல் (affective computing), மற்றும் சூழலறி கணினியியல் (context aware computing) போன்ற பல துறைகளும் வருகின்றன. இத்தகைய அணுகுமுறைகள் அனைத்தும் சேர்ந்து. AI அமைப்புகள் மனிதர்களுடன் மேலும் இயல்பாகத் தொடர்புகொள்ள உதவுகின்றன.

இந்தத் துறைகளில், இயற்கை மொழிகளைப் புரிந்துகொள்ளல் (NLP) மிகவும் முக்கியமானதாக உருவெடுத்துள்ளது; ஏனெனில் மனிதத் தொடர்பாடலின் மையத்தில் மொழியே உள்ளது. NLP என்பது மனித மொழியை எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட வடிவில் கணினி அமைப்புகள் புரிந்துகொண்டு உருவாக்கும் திறனைக் குறிக்கிறது. ஆரம்பகால NLP அமைப்புகள் பெரும்பாலும் இலக்கண விதிமுறைகள் மற்றும் குறியீட்டு ரீதியான காண்பியங்களின் மீது சார்ந்திருந்தன. ஆனால் இன்றைய அமைப்புகள் பெரும்பாலும் 'இயந்திரக் கற்றல்' மற்றும் ஆழக் கற்றல் அடிப்படையில் செயற்படுகின்றன. ChatGPT, Google Gemini, Claude போன்ற நவீன பெருமொழி மாதிரியமைப்புகள் (large language models), புத்தகங்கள், இணையத்தளங்கள், கட்டுரைகள், code, மற்றும் உரையாடல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மாபெரும் தரவமைப்புகளைப் (datasets) பாவித்துப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளன. இவை மொழி பற்றிய விதிகளை நேரடியாகச் சேமித்து வைத்திருப்பதில்லை; மாறாக, சொற்கள், வாக்கியங்கள், கருத்துக்கள் ஆகியவற்றுக்கிடையிலான புள்ளிவிபரவியல் ரீதியான தொடர்புகளைக் கற்றுக்கொள்கின்றன. இதன் மூலம், இவற்றால் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும், சுருக்கம் எழுதவும், மொழிபெயர்க்கவும், code உருவாக்கவும் முடிகிறது.

NLPஇன் மிக அடிப்படையான தொழில்நுட்பங்களில் ஒன்று tokenization ஆகும். ஒரு உரைப்பகுதியைக் கணனி ஒன்று புரிந்து கொள்வதற்கு முன், அந்த உரை சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட வேண்டும்; இவைதான் tokens எனப்படுகின்றன. இந்த tokens சில நேரங்களில் முழுச் சொற்களாகவும், சில நேரங்களில் சொற்களின் பகுதிகளாகவும், ஏன் முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி முதலிய அடையாளங்கள் ஆகவும் இருக்கலாம். உதாரணமாக, "அவள் எனது காசைக் களவெடுத்ததாக நான் ஒருநாளும் சொல்லவில்லை" என்ற வசனம், அவள், எனது, காசைக், களவெடுத்ததாக, நான், ஒருநாளும், சொல்லவில்லை என்றவாறு தனித்தனி tokens ஆகப் பிரிக்கப்படும். ஆனால் இங்கு முக்கியமானது, அர்த்தம் என்பது சொற்களால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு சொல்லுக்கும் பேசுபவர் கொடுக்கும் அழுத்தம் நடைமுறை வாழ்க்கையில் வசனத்தின் அர்த்தத்தைத் தீர்மானிக்கிறது.

உதாரணமாக, மேலே சொல்லப்பட்ட வசனத்தைப் பேசிய ஒருவர் "அவள்" என்பதை அழுத்தி உச்சரித்தால், அவள் தனது பணத்தைக் களவெடுக்கா விட்டாலும் வேறு யாரோ எடுத்துள்ளனர் என்று பொருள். "எனது" என்பதை அழுத்தி உச்சரித்தால், அவள் என் பணத்தை எடுக்காவிட்டாலும் வேறு யாருடையவோ பணத்தைத் திருடினாள் என்று பொருள். "காசை" என்று அழுத்தி உச்சரித்தால் அவள் பணம் திருடவில்லை, வேறு எதுவோ திருடினால் என்று பொருள். "களவெடுத்ததாக" என்று அழுத்தினால், அவள் களவு எடுக்கவில்லை, கடன் வாங்கினாள் என்று பொருள். "நான்" என்பதை அழுத்தி உச்சரித்தால், தான் அப்படிச் சொல்லாவிட்டாலும் வேறு யாரோ அந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர் என்று பொருள். இவ்வாறு ஒரே வசனம் பேசப்படும் முறையில் மிகப்பல பொருள்களைக் கொடுக்கலாம். ஒரு மனிதனால் இவற்றை இலகுவாக வேறுபடுத்த முடியும். ஆனால் இது NLP அமைப்புகளுக்கு மிகவும் சவாலாக உள்ளது.

NLP துறையில் மிகப்பெரிய முன்னேற்றமாக 2017இல் வெளியான "Attention Is All You Need" என்ற ஆய்வுக் கட்டுரையில் அறிமுகப்படுத்தப்பட்ட transformer architecture கருதப்படுகிறது. இதன் மையக் கருத்து கவனித்தல் (attention), குறிப்பாக பல்தலைக் கவனித்தல் (multihead attention) ஆகும். பல்தலைக் கவனித்தல் என்பது ஒரு வசனத்தில் உள்ள பல்வேறு தொடர்புகளை ஒரே நேரத்தில் பகுத்தறியும் திறனை வழங்குகிறது. உதாரணமாக, "முயல் வீதியைக் கடக்கவில்லை. ஏனென்றால் அது மிகக் களைத்திருந்தது" என்று சொல்லும்போது "அது" என்ற சொல் முயலைக் குறிக்கிறது. ஆனால் "முயல் வீதியைக் கடக்கவில்லை. ஏனெனில் அது மிக அகலமாக இருந்தது" என்று சொல்லும் போது "அது" என்ற சொல் வீதியையே குறிக்கிறது. மனிதர்கள் சொல்லபப்டும் விதம் மற்றும் தமது பொது அறிவில் இருந்து இதை மிக இலகுவாகப் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் ஒரு கணினிக்கு இது குழப்பத்தைக் கொடுக்கும். ஆனால் பல்தலைக் கவனித்தல் அமைப்புகள் ஒரு வசனம் முழுவதும் உள்ள சொற்களுக்கிடையேயான தொடர்புகளை நன்றாகக் கவனிப்பதன் மூலம் "அது" என்றால் எது என்று புரிந்து கொள்ள முயல்கின்றன. இங்கே வெவ்வேறு attention heads இலக்கணம், அர்த்தம், பின்னணி, சூழல் போன்ற வெவ்வேறு அம்சங்களைப் பார்த்துப் பகுத்தறிதல் செய்கின்றன. இதன் மூலம், மொழியில் உள்ள உள்ள நுணுக்கமான தொடர்புகளை அமைப்புகள் புரிந்துகொள்ள முடிகிறது.





இப்போது, நம்மில் பலர் பயன்படுத்தும் ChatGPT உண்மையில் எவ்வாறு செயல்படுகிறது என்பதைச் சுருக்கமாகப் பார்க்கலாம். ChatGPT என்பது ஒரு வகையான உருவாக்கிச் செயற்கை நுண்ணறிவு (Generative AI) ஆகும். அதாவது, இது முன்கூட்டியே சேமித்து வைத்த பதில்களை எடுத்துக்கொடுக்காது; மாறாக, பயிற்சி மூலம் கற்றுக்கொண்ட கோலங்கள் (patterns) அடிப்படையில் புதிய வசனங்கள், பந்திகள், கட்டுரைகளை உருவாக்குகிறது. முதலில், இது எழுத்து மொழியை tokens ஆகப் பிரிக்கிறது; பின்னர் அந்த tokensஐ embeddings என்ற கணிதவியல் மீளுருவாக்கமாக மாற்றுகிறது. அதன் பிறகு, transformer networks மற்றும் பல்தலைக் கவனித்தல் ஆகியவற்றைப் பயன்படுத்தி, சொற்கள் மற்றும் கருத்துகளுக்கிடையேயான தொடர்புகளைப் பகுத்தறிவு செய்கிறது. ஒரு உரையாடலில் , அடுத்ததாக எந்த token வருவதற்கான சாத்தியக்கூறு அதிகம் என்பதை மீண்டும் மீண்டும் கணித்து, வசனங்கள் மற்றும் பந்திகளை உருவாக்குகிறது. இந்த அர்த்தத்தில், ChatGPT என்பது மிகவும் மேம்பட்ட கோல முற்கூறல் அமைப்பு (patternprediction system) ஆகும். இது மனிதர்களைப் போலத் தன்னை உணர்ந்த அல்லது ஆழமாகச் சிந்திக்கும் ஒரு 'மூளையைக்' கொண்டது அல்ல. மனிதர்கள் அனுபவம், உணர்வு, சமூகப் புரிதல், நோக்கங்கள், மற்றும் நீண்டகால நினைவாற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்திக் காரண காரியங்களைப் பகுத்து உணர்கிறார்கள். ஆனால் ChatGPT மாபெரும் தரவமைப்புகளில் இருந்து கற்றுக்கொண்ட புள்ளிவிபரவியல் ரீதியான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு புதிய வசனங்கள், பந்திகள், கட்டுரைகளை உருவாக்குகிறது. அதாவது, இது நன்றாக யோசிக்கக் கூடியது மாதிரித் தோன்றினாலும், இது ஒருவழியில் நன்றாகப் பேசவல்லது, அவ்வளவுதான் என்று சொல்வதே அதிகம் உண்மையாக இருக்கும்.

நவீன பெருமொழி மாதிரியமைப்புகள் embeddings எனப்படும் மிக உயர்ந்த பரிமாணங்கள் கொண்ட numerical representationsஐப் பயன்படுத்துகின்றன.

(மறுபக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கற்பித்தற் தொழில்நுட்பத்தில் எண்ணிம அறிவின் முக்கியத்துவம்



○ நடேசு தயாளன்
(அதிபர், கோண்டாவில் இந்துக் கல்லூரி)

எண்ணிம (டிஜிற்றல்) கற்றல் முறை வகுப்பறை முகாமைத்துவச் செயன்முறையானது இங்கு ஆசிரியர்கள் காரணமாக மாற்றமடைந்துள்ளது. எனவே ஆசிரியர்களானவர்கள் எண்ணிமக்கற்றல் தொழில்நுட்பத்தை விளங்கவேண்டியுள்ளது. தொடர்பில் தெளிவுடையவர்களாக கல்வியியலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் எண்ணிமத் தொழில்நுட்பம் தொடர்பிலான வலுவூட்டற் செயன்முறையில் தம்மை ஈடுபடுத்தவேண்டியது அவசியமானதாகும். எண்ணிம அறிவு நவீன கற்றல், கற்பித்தலுக்கு அவசியமானதாகும். மாணவர்களது கற்றல் ஈடுபாட்டினை வலுவூட்டுவதற்கு இது உதவுகின்றது. வளங்களை அணுகவும் பொருத்தமான கருவிகளுடாகக் கற்றலை வளம்படுத்தவும் இது வேண்டப்படுகின்றது. 21ஆம் நூற்றாண்டின் திறன்களில் ஒன்றான எண்ணிமக் கூட்டிணைவுக்கும் விமர்சனச் சிந்தனைக்கும் இது வேண்டப்படுகின்றது  என்பதோடு சுதந்திரமான கற்றலுக்கும் இது வலுச்சேர்ப்ப தாகவுள்ளது.

எண்ணிமத் தொழில்நுட்ப  (Digital Technology) மேம்படுத்துதலில் தனிநபர்களுக்கிடையிலான கற்றல் இடைவெளியினைச் சீர் செய்வதாகவும் உள்ளது. எண்ணிமக் கற்றலுக்கு ஆசிரியர் வழங்கும் முக்கியத்துவமானது மாணவர்கள் எந்த இடத்தில் இருந்தும் கற்பதற்கான வாய்ப்பினை வழங்குவதோடு தமக்குப் பொருத்தமான கற்றல் சூழலினை உருவாக்கிக் கொள்ளவும் உதவுகின்றது. கற்போன் ஒழுங்கமைந்த கற்றலுக்கு அப்பாலும் கற்றலுக்கான பெற்றுக்கொள்வதோடு சிக்கல் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு தலைமைத்துவ ஆற்றலினை மிகுந்த வேலை உலகில் தன்னைப் புலமையாளனாகவும் வளர்த்துக்கொள்ள உதவுகின்றது.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் 2030ஆம் ஆண்டுக்கான நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரலின் குறித்த இலக்குகள் அடையப்படவேண்டுமானால் தரமான கல்வி வழங்கப்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தரமான கல்வி என்ற இலக்கினை அடைந்து கொள்வதற்கு கற்றல் கற்பித்தலில் எண்ணிமத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரிக்கப்படவேண்டும். மாணவர்களது கற்றலை வடிவமைப்பவர்களாக ஆசிரியர்களே விளங்கும் நிலையில் புதிய வகுப்பறை முகாமைத்துவத்திறன்கள் வளர்க்கப்படவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. வகுப்பறையில் ஆசிரியர்-மாணவர் இடைவினையுறவில் எண்ணிமக் கருவிகளின் பயன்பாடு இன்று வேண்டப்படுவதாகவுள்ளது.

இச் செயற்பாடு கற்றல் கற்பித்தலில் ஈடுபாட்டினைத் தூண்டுவதாக அமைந்து காணப்படும். திறன்பலகைகள் கைக்கணினி (Tap) மற்றும் கற்றல் செயலிகள் என்பன முக்கியத்துவம் பெறும் நிலையில் இத்தகைய சாதனங்களைப் பயன்படுத்தும் திறனினை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும்.

மாணவர் மைய வகுப்பறை நிலைமைகள் வலுவுடையதாக மாற்றப்படுவதனூடாக வகுப்பறையிலுள்ள ஒவ்வொருதனியாளும் வினைத்திறனுடனும் ஆர்வத்துடனும் செயற்படத் தூண்டப்படவேண்டும்.

இந்நிலையில் விமர்சனச் சிந்தனை சுயதிறன்கள் வழிப்பட்ட கண்டறிதல்கள் என்பவற்றினூடாக கற்போன் தனது கற்றல் ஊக்கலை உறுதியாக வலுவூட்டவேண்டும். இதனூடாக ஆழமான பாட அறிவினைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

புதுமை காணும் சிந்தனைக்குட்பட்ட கற்பித்தல் முறை யான செயற்றிட்ட அடிப்படையிலான கற்றல் செயன்முறையினூடாக பிள்ளைகளானவர்கள் இயற்கையான நடைமுறை உலகுடன் இணைந்த வகையில் கற்றலினை மேற்கொள்ளமுடிகின்றது. இங்கு அவர்களது அறிவினையும் திறனினையும் பயன்படுத்த முடிகின்றது. இங்கு விமர்சனச் சிந்தனை. பிரச்சினையைத் தீர்த்தல், சமூக உணர்வுஎன்பவற்றோடு வகுப்பறைக்கு வெளியிலான நடைமுறை உலகுடன் தொடர்புபட்ட கற்றலினை மேற்கொள்ள முடிகின்றது.

கற்போனுக்கு விளையாட்டு முறையிலான கற்றலுக்கு கூடிய வாய்ப்பளிப்பதன் மூலம் பிள்ளையின் ஆர்வம் கற்றலில் தூண்டப்படுகின்றது. கூட்டிணைவான கற்றல் செயற்பாட்டின் மூலம் உலகளாவிய கல்விச் செயன்முறைக்கு இசைவடைய முடிவதுடன் குழு உணர்வை வளர்ப்பதாகவும் உள்ளது.

மேலும் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஏனையவர்களின் எதிர்பார்க்கைகளையும் அறிந்து கொள்ளவும் முடிகின்றது.

மேலும் விசாரணை முறையிலான கற்றல் மூலம் பிள்ளைகளான வர்கள் தமது கற்றல் செயன்முறையினை வலுவூட்டமுடியும். இங்கு வினா எழுப்புவதனூடாக விடைகளைத் தேடி நகர்வதனூடாக பிள்ளைகளானவர்கள் செயற்பாட்டு ரீதியிலான அறிவைப்பெற முடிகின்றது.

எண்ணிம எழுத்தியலானது தொழில்நுட்பத்தினைப் பாதுகாப்பானதாகவும் விமர்சனப்பாங்கான வகையிலும் பயன்படுத்துவதோடு தகவல்களைச் சரியான முறையில் தொடர்பாடலுக்கு உட்படுத்துவதைக் குறிப்பதாகவுமுள்ளது.

இது அடிப்படையான கணனிப் பயன்படுத்துதலுக்கு மேலானது என்பதோடு டிஜிற்றல் செயன்முறையினைப் புரிந்துகொள்வதாகவுமுள்ளது. இச் செயன்முறை கணனிப் பாதுகாப்பு என்பதோடும் தொடர்புபட்டதாகும்.

*(மிகுதி அடுத்த வாரம்)*

# செயற்கை....


(00ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு tokenமும் ஒரு பல்பரிமாணக் கணித வெளியில் (multidimensional mathematical space) ஒரு புள்ளியாக உருவகிக்கப்படுகிறது. இங்கே semantic தொடர்புள்ள எண்ணக்கருக்கள் ஒன்றுக்கொன்று அருகில் அமைந்திருக்கின்றன. பயிற்சிக் காலத்தில், கணனி அமைப்புகள் சொற்கள் மற்றும் கருத்துகளுக்கிடையேயான தொடர்புகளையும் கோலங்களையும் கற்றுக்கொள்கின்றன. பின்னர் உருவாக்க வேண்டி நேரும்போது, அந்தக் கட்டுரை பற்றி முன்னே அறிந்த விபரங்களின் அடிப்படையில் அடுத்த tokenஐ எதிர்வு கூறுகின்றன. இப்படியே ஒவ்வொரு token ஆக எதிர்வு கூறப்பட்டு வசனங்கள், பந்திகள், பதில்கள், கட்டுரைகள் உருவாகின்றன. ஆகவே இந்த அமைப்புகள் மனிதர்களைப் போல மொழியை உண்மையாகப் "புரிந்துகொள்வதில்லை"; மாறாக, புள்ளிவிபரவியல் ரீதியான pattern modelling மூலம் பதில்களை உருவாக்குகின்றன. இருப்பினும், கணனி அமைப்புகளின் அளவும் சிக்கல்தன்மையும் மிக அதிகமாக இருப்பதால், அவற்றின் தொழிற்பாடு சிந்திக்கும் மனிதர்கள் பேசுவதை ஒத்ததாகத் தோன்றுகிறது. ஆனால் அவை உண்மையில் "சிந்திப்பதில்லை", வெறுமனே சங்கிலித் தொடராக வசனங்களை உருவாக்குகின்றன என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம்.

இயற்கையான ஊடாட்டங்கள் என்பது மொழியுடன் மட்டும் முடிவடைவதில்லை. தாக்கமுறு கணனியியல் (affective computing) என்பது முகபாவனைகள், குரலின் தொனி, சைகைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி மனித உணர்வுகளைப் பகுத்தறிந்து அதற்கு ஏற்பப் பதில் அளிக்க முயல்கிறது. மனித ரோபோட் தொடர்பாடல் (HRI) என்பது மனிதர்கள் மற்றும் ரோபோட்டுக்கள் இடையேயான பாதுகாப்பான மற்றும் இயல்பான தொடர்பை உருவாக்கும் துறையாகும். அதேபோல், பன்முக ஊடாடல் அமைப்புகள் உரை, ஒலி, படம், காணொளி ஆகியவற்றை ஒன்றிணைத்துப் பகுத்தறியக்கூடியதாக வளர்ந்து வருகின்றன. இதனால், சமீபத்திய AI அமைப்புகள் ஒரே நேரத்தில் உரை, ஒலி, படம், மற்றும் live video streams ஆகியவற்றைக் கையாளக் கூடியவையாக உள்ளன. இந்த முன்னேற்றங்கள் பல முக்கியமான நெறிமுறைச் சிக்கல்களையும் எழுப்புகின்றன. இனம், மொழி, நிறம் சம்பந்தப்பட்ட கோடல் (bias) காரணமாக, voice recognition அல்லது facial recognition அமைப்புகள் சில இனக்குழுமம் சார்ந்த மாந்தர்களின் உச்சரிப்புகள் அல்லது முக அமைப்புகளுக்குச் சரியாக வேலை செய்யாமல் போகலாம். அதேபோல், கண்காணிப்பு, பாதுகாப்பு, deepfakes, மற்றும் சில மனிதர்கள் AI அமைப்புளுடன் உணர்ச்சி ரீதியிலான தங்குநிலையை வளர்த்துக்கொள்ளல் போன்ற பிரச்சினைகளும் உருவாகின்றன. இச்சிக்கல்களைச் சமாளிக்க, தரவமைப்புகளைப் பல்வகைமைப்படுத்தல், நீதியான தரவமைப்புகள் உண்டா என்று சோதித்தல், விளங்கப்படுத்தக்கூடிய செயற்கை நுண்ணறிவு (explainable AI), வெளிப்படைத்தன்மை, தனிப்பட்டதன்மைப் பாதுகாப்பு, மற்றும் அறம் சார்ந்த கட்டுப்பாடுகள் போன்ற பொறுப்புணர்வுடைய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டின் வழிமுறைகள் மிகவும் அவசியமாகின்றன.

மொத்தத்தில், இயற்கையான ஊடாட்டங்கள் என்பது நவீன AIயின் மிகவும் தெளிவாகத் தெரியும் சமூக மாற்றத்தை ஏற்படுத்திய துறைகளில் ஒன்றாகும். இயற்கை மொழிகளைப் புரிந்துகொள்ளல், transformers, கவனித்தல் (attention) வழிமுறைகள், பன்முக ஊடாடல், மற்றும் தாக்கமுறு கணனியியல் ஆகிய துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், AI அமைப்புகள் மனிதர்களுடன் மேலும் இயல்பாகத் தொடர்புகொள்ள வழிவகுத்துள்ளன. இதன் தொடர்ச்சியாக, ChatGPT போன்ற 'பேசும்' செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் இன்று செயற்கை நுண்ணறிவின் பொதுமக்கள் காணும் முகமாக உருவெடுத்துள்ளன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




ஜெ.ஜனுஷியா

# செயலுக்கு முன் ஒரு இடைநிறுத்தம்

## ஒவ்வொரு நடத்தைக்கு முன்பும் ஒரு இடைநிறுத்தம் என்பது அவசியம் என நீங்கள் உணருகின்றீர்களா?

வெகுவாக மாறிக்கொண்டிருக்கும் இந்தச் சமூகத்தில் ஒரு மனிதனுடைய நடத்தையைப் புரிந்துகொள்வது என்பது மிகக் கடினமானதாகவும் அவசியமான ஒன்றாகவும் விளங்குகின்றது. இன்றைய காலகட்டத்தில் மனிதருடைய நடவடிக்கைகள் வினோதமானதாகவும் விசித்திரமானதாகவும் வியப்பில் ஆழ்த்தக்கூடியதாகவும் உள்ளன. அவ்வாறான வேறுபட்ட மனிதன் நடத்தைக்குரிய காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் எப்போதாவது சிந்தித்தது உண்டா? ஒரு வார்த்தையை பிரயோகிக்கும் முன்போ அல்லது ஒரு செயலை ஆற்றுவதற்கு முன்போ ஒரு சில நிமிடம் இடைநிறுத்தி சிந்தித்து செயலாற்றுவதன் மூலம் எல்லாவற்றையும் மாற்றிவிடமுடியும் என நீங்கள் நினைக்கின்றீர்களா? மனிதநடத்தை மிகவும் சிக்கலானதும், மாற்றமடைந்து கொண்டிருப்பதுமாகும். ஒரே சூழ்நிலையில் இரு மனிதர்கள் ஒரே மாதிரி செயற்படமாட்டார்கள். நமது செயல்கள் நமது தனிப்பட்ட குணாதிசயங்கள், சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் சுற்றுப்புறச்சூழல் ஆகியவற்றின் இணைப்பால் தீர்மானிக்கப்படுகின்றன. எளிமையாகச் சொன்னால், நடத்தை -குணாதிசயம் + சிந்தனை + உணர்வு + சூழல். இந்த இணைப்பு தான் ஒரே சூழ்நிலையிலும் மனிதர்கள் ஏன் வேறுபட்ட முறையில் நடந்துகொள்கிறார்கள் என்பதை விளக்குகிறது.

சமீப காலங்களில் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் சமூக விரோத நடத்தைகள் அதிகரித்துள்ளன. இத்தகைய செயல்களை எளிதில் 'தவறு' என்று குற்றஞ்சாட்டுவது சாதாரணமாக இருந்தாலும், அந்த நடத்தைகளின் உளவியல் பார்வை மிகவும் ஆழமானது. ஒரு நடத்தை என்பது தனித்து உருவாகக்கூடியது அல்ல. அது ஒரு மனிதனுடைய உள்ளுணர்வுகளும் வெளிப்புற அழுத்தங்களும் இணைந்து உருவாக்கும் விளைவாகும். எடுத்துக்காட்டாக பொருளாதார அழுத்தம், சமூகப்பதற்றம், மேலும் கடுமையான வெப்பநிலை போன்ற சுற்றுப்புறக்காரணிகள் கூட மனிதர்களின் சிந்தனை மற்றும் உணர்வுகளைப் பாதிக்கக்கூடும். உதாரணமாக விஞ்ஞான ஆய்வுகள், அதிக வெப்பநிலைகூட கோபத்தையும் எரிச்சலையும் அதிகரித்து, திடீர் மற்றும் கட்டுப்பாடற்ற செயல்களைத் தூண்டக்கூடும் எனக் கூறுகின்றன. ஒரு நபரின் உணர்ச்சிநிலை அவரது நடத்தையில் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அமைதியாகவும் சமநிலையுடனும் இருக்கும் ஒருவர் சிந்தித்துச் செயற்படுவார். ஆனால் மனஅழுத்தம் அல்லது எரிச்சலில் இருப்பவர் விளைவுகளை யோசிக்காமல் செயற்படக்கூடும். இதுவே விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.



ஒரு உளவியலாளராக, நமது உணர்வுகள் மற்றும் நடத்தைகளைக் கட்டுப்படுத்த நான் பரிந்துரைக்கும் ஒரு சிறந்த உத்தி 'ஒரு நிமிடம் நின்று சிந்திப்பது' (இடைநிறுத்தம்). நாம் பேசுவதற்கு முன், பதிலளிப்பதற்கு முன், அல்லது எந்தச் செயலையும் செய்வதற்கு முன் ஒரு சிறிய இடைவெளி எடுப்பது பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது. இந்த இடைவெளி நம்மை திடீர் உணர்ச்சி செயற்பாடுகளைத் தாண்டி, பொறுப்பான முடிவுகளை எடுக்க உதவுகிறது. இது உணர்வுகளை அடக்குவது அல்ல; அவற்றைப் புரிந்துகொண்டு சரியாக நிர்வகிப்பது. உளவியல் விழிப்புணர்வை மேம்படுத்துவது நிபுணர்களின் பொறுப்பே அல்ல. அது ஒவ்வொரு நபரின் கடமையாகும். பரிவு, சுயகட்டுப்பாடு மற்றும் சிந்தனையுடனான அணுகுமுறையை வளர்த்தால், நாம் தீங்கு விளைவிக்கும் நடத்தைகளைக் குறைத்து, ஒரு கருணையுள்ள சமூகத்தை உருவாக்க முடியும்.



**'சிந்தித்து செயலாற்றுங்கள்'**

# மே - 18 நெஞ்சழியாத நினைவுநாள்

சூழ்ச்சிகளும் துரோகங்களும்
ஏமாற்றுக்களும் காட்டிக்கொடுப்புக்களும்
உலகறிந்த தமிழர் வீரத்தை
வெற்றிகொண்ட நினைவுநாள்!

பாதுகாப்பு வலயம் என
பௌவ்வியமாக வற்புறுத்தி வரவழைத்து
இரக்கமின்றி இனப்படுகொலை செய்ததை
என்றும் மறவா நினைவு அழியா நாள்!

கண் விழித்து களமாடி
உடல் மெலிந்து உடுத்த உடையுடன்
உறவினர் முன் கையசைத்து விடைபெற்றோர்
காணாமற்போன நினைவுநாள்!

உயிரற்ற தாய்மையின் அரவணைப்பில்
அவளது மார்பில் உதிரம் உறிஞ்சி
உறவு பிரிந்தாலும் உயிர்பிரியாத
மழலையின் நினைவுநாள்!

அடுத்த சந்ததி மீதும் உணர்வாளர்கள் மீதும்
தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் மீதும்
அசையாத நம்பிக்கை கொண்டு
விடியலை நோக்கி நடந்திடும் நினைவுநாள்!

மானம் மறைக்கக்கூட மாற்றுத் துணியுமின்றி
மனச்சாட்சி இன்றி ஈனப்பிறவிகளால்
மானபங்கம் செய்யப்பட்ட
மங்கையர்களை என்றும் மறக்காத நினைவுநாள்!

உயிரினும் மேலான கொள்கைப்பற்றுடன்
உறுதி குலையாத நிழலரசின் கீழ்
முன்னுதாரண மூபத்தாண்டுகள் முடிவீல்
நந்திக்கடலில் நாதியற்றவர்களாகிய நினைவுநாள்!

கனவுகளும் காத்திருப்புகளும் கானல் நீராகிவிட
தொப்புள்கொடி உறவுகளும் உதறித்தள்ளிவிட
உரமேறிய வீரத்துடன் கடைசிவரை களமாடிய
தமிழர் தேசம் விலைபோகாத நினைவுநாள்!


அயல்நாட்டு நடிகனைத் தளபதி என பனர்கட்டி குதூகலிக்கும்
அரசியல் தெளிவற்றவர்கள் மத்தியில்
முகம் தெரியாமல் யாரும் அறியாதவர்களாக
வாழ்ந்தோரின் நினைவுநாள்!

உப்புக்கஞ்சியை அமிர்தமாகக் குடித்து
நாளுக்கொரு பங்கரில் இஷ்ட தெய்வங்களை வேண்டியும்
இறுதிக்கிரிகை இன்றி ஆறடி நிலமுமின்றி
இன்னுயிர் ஈந்தோர் நினைவுநாள்!

உலகின் வல்லாதிக்கமும்
எரிக் சொல்ஹெய்மின் ஏமாற்றுகளும் ஐ.நா.வின் அசமந்தமும்
உரிமைக்காக போராடிய மக்களுக்கு
வஞ்சகம் செய்த வரலாற்று நினைவுநாள்!


இரசாயனக் குண்டுகளுக்கும் வேற்றுநாட்டு விசேட படைக்கும்
சரணடையாது சாவிற்கும் அஞ்சாத
எம்மண்ணில் வித்தாக விதைக்கப்பட்டவர்களின்
முள்ளிவாய்க்கால் நினைவுநாள்!

செ. ஆதவன்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கைக்கு மீண்டும் பொருளாதார நெருக்கடி



## எச்சரிக்கிறார் ஹர்ஷ டி சில்வா

**கொழும்பு, மே 20**
**இலங்கை மீண்டும் பெரும் பொருளாதார நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எச்சரித்துள்ளார்.**

தற்போது அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஹர்ஷ டி சில்வா, அங்கு மிக முக்கியமான உயர்மட்டச் சந்திப்புகளில் பங்கேற்றுள்ளார். உலக வங்கியின் தெற்காசியப் பிராந்திய மூலோபாயப் பணிப்பாளர் நிகோல் கிளிங்கன் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய- பசிபிக் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சோனாலி ஜெயின் சந்திரா மற்றும் இலங்கைக்கான திட்டப் பணிப்பாளர் இவான் பாப்பகோர்ஜியு ஆகியோருடன் பேச்சுகளை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் இலங்கையில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு அப்பாற்பட்ட வளர்ச்சிப் பாதைகள், தற்போதுள்ள தடைகள் மற்றும் அவற்றுக்கான தொழில்நுட்ப ரீதியான தீர்வுகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இந்த நிலையில் நாடு மீண்டும் ஒரு பொருளாதாரச் சரிவை நோக்கிச் செல்லுமானால், அனுபவம் வாய்ந்த பொருளாதார நிபுணர்களின் பங்களிப்பு அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)

## டொலர் நெருக்கடியாலேயே வரியை அதிகரிக்கிறது அரசு

### மரிக்கார் எம்.பி.குற்றச்சாட்டு



அரசாங்கம் டொலர் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதால் வரிச் சுமையை மக்கள் மீது திணிக்கின்றது. இதன் ஓர் அங்கமாகவே வாகன இறக்குமதியைத் தடை செய்யாமல் வரியை அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் வீடுகளில் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் உபகரணங்களுக்கும் அரசாங்கம் வரியை விதிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசாங்கம் 33 வீதம் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதாகத் தெரிவித்து, தற்போது மின்சாரக் கட்டணத்தை 40 வீதம் அதிகரித்துள்ளது. அதே போன்று உணவு, கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பான பொருள்களின் வரியை பூச்சியமாக்குவதாகத் தெரிவித்து, முன்னர் இருந்ததைவிட விலை அதிகரிப்பைச் செய்துள்ளது. நாட்டில் டொலருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே திறைசேரியில் இருந்து 2.5 மில்லியன் டொலர் காணாமல் போயுள்ளது. இந்த நிலைமைகளைச் சமாளிக்கவே அரசாங்கம் வரி அதிகரிப்பை மேற்கொண்டு வருகின்றது-என்றார். (க-இ)

## சுற்றுலா வருமானம் கடந்த மாதம் வீழ்ச்சி

கொழும்பு, மே 20
கடந்த ஏப்ரல் மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானம் வீழ்ச்சியடைந்துள் ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில் மொத்த சுற்றுலாத்துறை வருமானம் 157.1 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும், 2025 ஏப்ரல் மாதத்தின் சுற்றுலா வருமானமான 256.7 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது, இது 38.8 வீத வீழ்ச்சி என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் புள்ளிவிவரங்களின்படி, கடந்த ஏப்ரல் மாதத்தில் நாட்டுக்கு வந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 135,643 ஆகும். அதேவேளை, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 174,608 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையின் ஊடாக 256.7 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாயாக ஈட்டப்பட்டிருந்தது. (எ-இ)



## ஐக்கிய மக்கள் சக்தி அரசுடன் இணையாது

### அஜித் பி பெரேரா திட்டவட்டம்

கொழும்பு, மே 20
ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணையப்போவதில்லை என்று அந்தக் கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா. அரசாங்கத்துடன் இணையவுள்ளார் என வெளியான தகவல் தொடர்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
தேசிய மக்கள் சக்தி அரசாங்கமென்பது மூழ்கும் கப்பலாகும். அவ்வாறு மூழ்கும் கப்பலில் ஏறுவதற்கு நாம் தயாரில்லை. ஹர்ஷ டி சில்வா மாத்திரமல்ல, ஐக்கிய மக்கள் சக்தியில் எந்தவொரு உறுப்பினரும் இந்த அரசாங்கத்தில் பதவிகள் வகிக்கப் போவதில்லை. எவ்வாறான அழைப்புகள் விடுக்கப்பட்டாலும் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தில் எவ்வித பதவியையும் வகிக்க மாட்டார். தேர்தல் காலத்தில் தங்களை மலர்கள் எனவும், எதிரணியை புற்கள் எனவும் தேசிய மக்கள் சக்தியினர் விமர்சித்தனர். ஆனால் தாங்கள் மலர்கள் என்பதை தற்போது அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். என்றார். (க-44-பி)

உங்கள் அன்புக்குரியோருக்கு
தரமான பராமரிப்பு -
வீட்டிலேயே நர்சிங் சேவை
யாழ்ப்பாணம் முழுவதும்

உடல்நிலை கண்காணிப்பு
காயப் பராமரிப்பு
IV திரவ சிகிச்சை
உடற்பயிற்சி சிகிச்சை
தனிப்பயனாக்கப்பட்ட வீட்டுப் பராமரிப்பு
இன்றே பதிவு செய்யுங்கள்!
94 76 633 3559 www.mnursing.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சாமர சம்பத் எம்.பி.யின் பயணத்தடையில் தளர்வு




கொழும்பு, மே 20

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையைத் தற்காலிகமாகத் தளர்த்தி கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசேட மனு ஒன்றின் மூலம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரருக்கு அவசர வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளதால், அவருக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத்தடையைத் தற்காலிகமாக நீக்குமாறு மேல் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார். இருதரப்புச் சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மட்டும் பயணத்தடையைத் தற்காலிகமாகத் தளர்த்துவதற்கு உத்தரவிட்டார்.

(ச-இ)

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
**திரு. பா.குருபரன்** அவர்களின் அன்புத் தந்தையாகிய
**அமரர் சண்முகம் பாக்கியராசா**
அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 05 . 1963

மறைவு 14 . 05 . 2026

### முத்தையா சிறிபாஸ்கரன்

யாழ் கந்தரோடை மேற்கு, மடத்தடி சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சிறிபாஸ்கரன் அவர்கள் கடந்த (14.05.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா மற்றும் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - தவமணிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் (சசி) ஆருயிர் கணவரும், கபில்ராஜ் (கனடா), துவாரகா, தீபிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபா, நந்தகுமார், றொஸான் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், புஸ்பவானதி, ஸ்ரீதரன், ஸ்ரீகாந்தன் (ஜேர்மன்), காலஞ்சென்ற ஸ்ரீஜெயதரன் மற்றும் புஷ்பலதா (ஜேர்மன்), ஸ்ரீநாகேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரலிங்கம், சூரியகலா, றஜிகலா (ஜேர்மன்), ரவீந்திரன் (ஜேர்மன்), கயிதா (கனடா), விமலாதேவி, சுசிலாதேவி (சுவிஸ்), தர்மஸ்ரீ (கனடா), ராஜஸ்ரீ (நோர்வே), காஞ்சனாதேவி (பிரான்ஸ்), சிமித்ராதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தெய்வேந்திரநாதன், காலஞ்சென்ற தர்மேந்திரராஜா மற்றும் தனுஷா (கனடா), யாழினி (நோர்வே), தில்லையம்பலம் (பிரான்ஸ்), கிரிதரன் (கனடா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், திசானா, மாதுஷா, ஆதித், நிதர்சனா, ரிஷிகேஸ், அனாமிக்கா, அஸ்மிதா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2026) புதன்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**மடத்தடி, கந்தரோடை, சுன்னாகம்.**

(CS/61470) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 12 . 1947

மறைவு 19 . 05 . 2026

### சண்முகம் பாக்கியராசா

மட்டக்களப்பு, பெரியகல்லாறு, 1ம்குறிச்சியை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை பேச்சியம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பாக்கியராசா அவர்கள் நேற்று (19.05.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் இராசம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சாம்பசிவம் பத்மாவதி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற திலகவதியின் ஆருயிர் கணவரும், ஜெயந்தி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), குருபரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), சிவலோஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமணி, பரமேஸ்வரி, தவராசா (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்) தனலட்சுமி, தங்கராசா (ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர், இலங்கை மதுவரித் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீகரன்ஜி (ஆசிரியர், யா/உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை), சயந்தன் (உரிமையாளர், Iconic Builders, தென்றல் பல்பொருள் அங்காடி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிர்ஷன், நிர்ஷிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.05.2026 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**ஜெயந்தி - 0776701039 (மகள்)**
**குருபரன் - 0774007227(மகன்)**

(CS 31823)A

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 05 . 1960

மறைவு 18 . 05 . 2026

### ஞானபாலசிங்கம் சந்திராதேவி

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானபாலசிங்கம் சந்திராதேவி அவர்கள் கடந்த 18.05.2026 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், தாரணி (அமெரிக்கா), யாழினி (ஜேர்மன்), திவாகரன் (பிரான்ஸ்), தாட்சாயினி ஆகியோரின் அன்பு தாயும், உதயராசா, இந்திரகுமார், யாழினி, திருக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீராம், ராகவி, பிரணவி, அஜன், ஓவியா, மீரா, இனியா, அதிரன், விஸ்னுஜன், தனுராம், கோவர்த்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர். (Sunway)**

**கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.**

(CS 31826)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





## புதிய...

மாந்தை மேற்கு பிரதேசசெயலாளராகப் பதவிவகித்து வந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் மாநகரசபையின் புதிய ஆணையாளராக டி.சி. அரவிந்தராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆணையாளராக பணியாற்றிவந்த நிலையிலேயே வடக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக கிருஸ்ணேந்திரன் நியமனம் பெற்றுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் நிகழ்வில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## பிரிவினைக்கு...

17ஆவது தேசிய போர்வீரர்கள் நினைவுதினம் நேற்று நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

எனது ஆட்சியின் கீழ் பிரிவினைவாதத்துக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது. இனி ஒருபோதும் இந்த நாட்டில் யுத்தம் ஏற்படாதிருப்பதே எனது அரசாங்கத்தின் இலக்காகும். இரத்த வெள்ளத்தாலோ அல்லது வெடிகுண்டுகளாலோ நாட்டை கட்டியெழுப்ப முடியாது, அமைதியால் மட்டுமே அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்க முடியும்.

தமக்காக அன்றி ஏனையோருக்காகவும் நாட்டின் அமைதிக்காகவும் தமது உயிரை தியாகம் செய்த இராணுவத்தினருக்கும், அவர்களை நாட்டுக்காக அர்ப்பணித்த பெற்றோருக்கும் நாடு என்ற ரீதியில் எமது கௌரவத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். நாட்டின் பாதுகாப்பையும் அமைதியையும் உறுதிப்படுத்துவதற்காகவே ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் தமது உயிரைத் தியாகம் செய்தனர்.

அமைதியான, அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்கும் நோக்கிலேயே எமது இராணுவத்தினர் உயிர்த்தியாகம் செய்தனர். அதைநோக்கி எனது அரசாங்கத்தின் பயணம் அமையும் என உறுதியளிக்கிறேன். இவற்றில் எந்தவொரு விடயமும் எந்தக் காரணத்துக்காகவும் கைவிடப்படமாட்டாது.

தற்போது நாட்டில் ஒற்றுமையை விரும்பாத ஒரு பாதையும், ஒற்றுமையை அங்கீகரிக்கும் மற்றொரு பாதையும் காணப்படுகின்றன. நாம் இரண்டாவது பாதையை மாத்திரமே தெரிவு செய்வோம். தற்போது சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு நற்பெயர் உள்ளது. சட்டத்தையும், சட்டத்தின் ஆட்சியையும் மதிக்கும் நாடாக இலங்கையை அடையாளம் செய்துள்ளோம். இதுவே எமது இராணுவத்தின் விருப்பமுமாகும்.

இராணுவத்தினர் பிரிவினைக்கு எதிராகவே போராடினர். மாறாக மக்களுக்கோ அல்லது குறிப்பிட்டவொரு இனத்துக்கோ எதிராக போராடவில்லை. வடக்கு மற்றும் தெற்கில் அரசியல் இலாபம் தேட முற்பட்டவர்களால் தான் இந்த பேரழிவை நாடு எதிர்கொள்ள நேர்ந்தது. இன்றைய சமூகத்தில் யுத்தம் சரியானதா இல்லையா என்ற விவாதமொன்று காணப்படுகிறது. ஆனால் எமது விவாதம் இனியொருபோதும் இந்த நாட்டில் யுத்தம் என்ற ஒன்று ஏற்படாமலிருப்பதை உறுதிப்படுத்துவதாகும். ஜனநாயகத்தை விரும்பாத ஜனநாயகத்தைப் புறமொதுக்குகின்ற குழுவும் நாட்டில் உள்ளது. அவர்களையும் உள்ளடக்கிசட்டத்தை அனைவருக்கும் சமமான முறையில் நடைமுறைப்படுத்துவோம் - என்றார். (அ-ம)

## புலிகளை...

தார். பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு விமல் வீரவன்ஸவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் வெள்ளவத்தையில் பயங்கரவாதிகளை நினைவுகூர இடமளிக்கப்பட்டுள்ளது. இது தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட பிரச்சினையாகும். அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளால் நாட்டில் இன்னொரு பிரபாகரன் உருவெடுத்தாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் அல்குவைதா பயங்கரவாதிகளை நினைவுகூருவதற்கு அனுமதியில்லை. ஜேர்மனியில் ஹிட்லரை நினைவு கூருவதற்கு தற்போதுவரை அனுமதியில்லை. ஆனால், இங்குதான் அனைத்தும் தலைகீழாக நடக்கின்றன. தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக தேசியப் பாதுகாப்பைப் பணயம் வைக்கின்றனர். புலம்பெயர் புலிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கிலேயே இதையெல்லாம் செய்கின்றனர். ராஜபக்சக்களை விசாரணைக்காக அழைத்ததும் புலம்பெயர் புலிகளைத் திருப்திப்படுத்தவே - என்றார். (அ-ம-இ)

## மோ.சைக்கிள்...

யின்போது நேற்று உயிரிழந்தார். பரந்தன் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சைக்கிளில் சென்ற மாணவர் மீது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. இதன்போது படுகாயம் அடைந்த குறித்த மாணவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், மேலதிக சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்தார். (அ-ம-55)

## பாடசாலை...

குடத்தனை - கரையூர் அ.மி.த.க. பாடசாலையின் அதிபருக்கு அணமையில் இடமாற்றம் வழங்கப்பட்டது. இதையடுத்தே இந்த இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறு வலியுறுத்தியும், அந்த அதிபரை மீளவும் குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலைக்கு நியமிக்குமாறு வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (அ-ம-27)

## எய்ட்ஸைக்...

கூட்டத்தொடரில் வைத்தே எய்ட்ஸ் தொற்றைக் கட்டுப்படுத்தியதற்கான பாராட்டுச் சான்றிதழ் இலக்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், சிபிலிஸ் வைரஸ் பரவலையும் இலங்கை வெகுவாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டியுள்ளது. (அ-ம)

## நவக்கிரியில்...

மும், யாழ்ப்பாணம் சித்த மருத்துவ பீடமும் இணைந்து நடத்திய மூலிகைக் கண்காட்சி நேற்றுச்செவ்வாய்க்கிழமை காலை 9.45 மணியளவில் நவக்கிரி மத்திய சித்த மருத்துவமனை வளாகத்தில் இடம்பெற்றது.

வடமாகாண சுதேச அமைச்சின் உதவிச் செயலாளர் சுரேன் பிரதம விருந்தினராகக் கலந்து கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

நவக்கிரி மத்திய சித்த மருத்துவமனை வளாகத்தில் 217 வகையான மூலிகைத் தாவரங்கள் காணப்படுகின்ற நிலையில் 80 வகையான மூலிகைத்தாவரங்கள் குறித்த கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. அந்த மூலிகைகளால் கிடைக்கும் பயன்கள் தொடர்பாக தெளிவான விளக்கமும் வழங்கப்பட்டது. (அ-ம-66)

## கடற்...

கடற்படையினர் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமையவே இந்தச் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. மறு அறிவித்தல்வரை இந்தச் சேவைநிறுத்தம் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## சர்வதேச...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று தசாப்தங்களாக நிலவிய பயங்கரவாதப் போரை வெற்றிகரமாக முடித்துவைத்து, நாட்டை மீட்டெடுத்த இராணுவம் எம்மிடம் உள்ளது. மிகச் சிறப்பு வாய்ந்த இந்த நாளில் போர்வெற்றிக்கு அரசியல் ரீதியாகத் தலைமைத்துவம் வழங்கிய மஹிந்த ராஜபக்ச, அப்போதைய இராணுவத் தளபதி பொன்சேகா, முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புத் துறையினர் என அனைவருக்கும் எனது மரியாதையைச் செலுத்துகின்றேன்.

போர்வெற்றியில் பாதிக்கப்பட்டவர்களாக நாட்டில் பலர் காணப்படுகின்றனர். அவர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் உள்நாட்டில் விவாதிக்கப்பட வேண்டும். ஜெனிவாவில் அவற்றை விவாதிப்பதை ஏற்க முடியாது. எமது நாட்டுப் பிரச்சினைகளை எமது நாட்டுக்குள் தீர்ப்பதே சரியானதும், பொருத்தமானதுமாகும் - என்றார். (அ-ம-இ)

## இராணுவத்தைப்...

பயங்கரவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் ஆதரிக்கும் போக்கு இலங்கையில் மீண்டும் அதிகரித்து வருகின்றது. பயங்கரவாத நிகழ்ச்சி நிரலை நினைவுகூர இலங்கையில் அனுமதி வழங்கப்படும் அதேநேரம், போரில் உயிரிழந்த இராணுவத்தை அஞ்சலிப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. இதற்காக ஓர் அரசாங்கம் என்ற வகையில் ஆளுந்தரப்பினர் வெட்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம-இ)

## பரராஜசேகரப்...

வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. (அ-ம-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச அவசரநிலையாக அறிவிக்கப்பட்டது எபோலா



## கொங்கோவில் தாண்டவம் பலியெடுப்பு 80 ஐத் தாண்டியது

கின்ஷாசா, மே 20

ஆபிரிக்க நாடுகளில் எபோலா வைரஸ் தீவிரமாகப் பரவிவரும் நிலையில், அந்தப் பெருந்தொற்றை உலகளாவிய நெருக்கடியாகவும், சர்வதேச அவசர நிலையாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

கொங்கோ, உகாண்டா, சூடான் உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் கடந்த சில வாரங்களாக எபோலா தொற்று மிகத் தீவிரமாகப் பரவிவருகின்றது. அடையாளம் காணப்படமுடியாத வகையில் அந்த வைரஸ் சமூகப்பரவல் அடைந்துள்ளது. இதையடுத்தே, எபோலா வைரஸை சர்வதேச அவசர நிலையாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

எபோலா தொற்றுக் காரணமாக, கொங்கோவில் சமீப வாரங்களில் 80பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 240க்கும் மேற்பட்டோர் கவலைக்கிடமானநிலையில்சிகிச்சைபெற்றுவருகின்றனர். எபோலாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக அங்கு விசேட மருத்துவக் குழுக்களை உலக சுகாதார ஸ்தாபனம் அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கச்சா எண்ணெய் விலை உயர்வு!

தெஹ்ரோன், மே 20

ஈரானில் மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டுவரும் நிலையில், கச்சா எண்ணெய் விலை மூன்று வீதத்தால் அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் போர்நிறுத்த நிபந்தனைகளை ஈரானும், ஈரானின் முன்மொழிவுகளை அமெரிக்காவும் ஏற்க மறுத்துள்ளன. இதனால், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் ஏற்படும் சாத்தியங்கள் உருவாகியுள்ளன. இவ்வாறான நிலையிலேயே கச்சா எண்ணெய் விலை மூன்று வீதத்தால் அதிகரித்துள்ளது. (ம)

### வைபவ் சூரியவன்ஷி மிரட்டல்

## லக்னோவை அதிரடியாக வீழ்த்தி பிளே–ஓப் வாய்ப்பில் ராஜஸ்தான்!




ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோவை அதிரடியாக வீழ்த்தி பிளேஓவ் செல்வதற்கான வாய்ப்பை பிரகாசப்படுத்தியது ராஜஸ்தான் றோயல்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மிச்செல் மார்ஷ் 96 ஓட்டங்களையும், ஜோர்ஜ் இங்கில்ஸ் 60 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களான ஜெய்ஸ்வால் மற்றும் சூரியவன்ஷி இருவரும் இணைந்து பலமான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். 43 ஓட்டங்களுடன் ஜெய்ஸ்வால் ஆட்டமிழந்தாலும், சூரியவன்ஷி மற்றும் ஜுரல் இணைந்து ஆட்டத்தை வலுவாக நகர்த்திச் சென்றனர். 38 பந்துகளில் 93 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் சூரியவன்ஷி. ஜுரலும் அரைச்சதம் கடக்க 5 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது ராஜஸ்தான் றோயல்ஸ். (ம)

## மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், மே 20

மட்டுவில் பனையடிப் பிள்ளையாளர் ஆலயத்தின் மணவாளக்கோல உற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை முதல் நடைபெறவுள்ளது. (ச)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மே 20

பருத்தித்துறை தும்பளை தம்புருவளைசித்திவிநாயகர் கோவில் பெருந்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. உற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். பெருந்திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ இ. விக்னேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன. (ச-9)

ஆண் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடைக்கு ஆண் வேலையாள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் 60,000/- - 70,000/- வழங்கப்படும்.

077 937 0000, 075 988 1000



## லெபனான் - இஸ்ரேல் போர்நிறுத்தம் நீடிப்பு!

லெபனான் - இஸ்ரேல் இடையிலான போர்நிறுத்தத்தை மேலும் 45 நாள்களுக்கு நீடிப்பதற்கு இரு நாடுகளும் சம்மதித்துள்ளன.

இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் சரமாரியான தாக்குதல்களை நடத்தி வந்தது. லெபனானும் பதில் தாக்குதல்களை நடத்திய நிலையில் இது இரு நாடுகளுக்கும் இடையிலான போராக மாறியிருந்தது. இதையடுத்து அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் தலையீட்டில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் போர்நிறுத்தம் ஏற்பட்டது. இவ்வாறான நிலையிலேயே தற்போது போர்நிறுத்த ஒப்பந்தம் மேலும் 45 நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

வேலைவாய்ப்பு-சுத்திகரிப்பாளர்
[ஆண்- வயது : 25-55]

இணுவிலில் உள்ள உணவகத்திற்கு தங்கியிருந்து வேலை பார்க்கக்கூடிய சுத்திகரிப்பாளர் தேவை.
✻ தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
✻ சம்பளம் :50000/= - 60000/= வரை

0779912628/0771041923

## சீனா செல்கின்றார் ரஷ்ய அதிபர் புடின்

ரஷ்ய அதிபர் புடின் இரண்டு நாள்கள் பயணமாக சீனாவுக்குச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் இரண்டு நாள்கள் பயணமாக சீனாவுக்குச் சென்றிருந்தார். இவ்வாறான நிலையில், அதிபர் புடினின் சீனப் பயணம் பெரும் எதிர்பார்ப்பை ஏற் படுத்தியுள்ளது. ரஷ்யா - சீன உறவுகளைப் பலப்படுத்தவும், இருநாடுகள் இடையேயும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாகவும் சீன ஜனாதிபதி ஜி ஜிங்பிங் உடன் விளாடிமிர் புடின்பேச்சுவார்த்தைநடத்த விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

சொகுசு வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் இணுவிலில் அமைந்த வெளிநாட்டவர்கள் தங்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட சொகுசு வீடு வாடகைக்கு உண்டு.
AC/ NON AC வசதிகளுடன் நாள் வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 071 330 0008

CS/6479 J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.